ரமணா போற்றி

Ramana Glory Be To You



மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்
Mahalakshmi Suryanandan

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

ரமணா போற்றி

Ramana
Glory Be To You

மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்

Mahalakshmi Suryanandan

பதிப்பாளர்

ஸ்ரீ ரமண கேந்திரம் - புதுடில்லி

1997

முதற் பதிப்பு : செப்டம்பர் 1997

Ramana Glory Be To You (English & Tamil)

© ரமண கேந்திரம், டில்லி

விலை : ரூ. 30/-

அட்டை ஓவியம், சித்திரங்கள் : **பத்மவாஸன்**

பதிப்பாளர் : **ரமண கேந்திரம்,**
8, இன்ஸ்டிடியூஷனல் ஏரியா,
லோதி ரோடு, புதுடில்லி - 110 003.

அச்சுக்கோர்வை : **ரிப்ளிக்கா, சென்னை - 600 004.**

அச்சிட்டோர் : **கார்த்திக் ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,**
சென்னை - 600 015.



சமர்ப்பணம்

சென்னை, அடையார் V.H.S. (வாலன்டரி
ஹெல்த் சர்விஸஸ்)யின் ஸ்தாபகரும்,
எனது அன்புமிக்க சிறிய தந்தையுமான
அமரர் டாக்டர் K.S. சஞ்சீவி, சிற்றன்னை
அமரர் அலமேலு சஞ்சீவியின்
நினைவிற்கு

— மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்





பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி

அவனேயென் னம்மை யவனேயென் னப்பன்
அவனேயென் னாண்டா னவனேயென் றோழன்
அவனேயென் னன்ப னவனேயென் னின்பன்
அவனேயெனக்கனைத்து மாம்.

— ஸ்ரீ முருகனார்

ஸ்ரீரமண ஞான போதம்
ஐந்தாம் பாகம் (மூன்றாம் பிரிவு)
பக்கம் -270, பாடல் - 1931)

FOREWORD

Religious feeling and spiritual awareness are beyond the realm of reason or ritual. A pilgrim on the path of inquiry towards awareness of the ultimate Truth is guided more by the heart than the head. As he journeys along the path, his thoughts, feelings, and perceptions find a more natural and spontaneous expression in emotional poetry than in logical prose. Saints and seers in the *bhakti* tradition of Bharat have left behind soul-stirring hymns conveying their experiences as seekers of identification with the ultimate Truth. These hymns form an integral part of our spiritual lore.

This book is a collection of such hymns composed in Tamil by Smt. Mahalakshmi Suryanandan, an ardent devotee of Ramana Maharshi. She has had the unique privilege of imbibing Bhagavan's boundless grace even from her very young days as she used to visit Ramanashram frequently accompanying her father, Prof. K. Swaminathan, the great Gandhian scholar and a highly respected exponent of Maharshi's philosophy. Including an earlier publication, the songs composed by her total 108 – a number traditionally associated with worship of God by chant of holy names – and are phrased in exquisitely poetic Tamil, expressing her lofty thoughts and perceptions generated by her reverential recollection of several aspects of Bhagavan's life and sayings.

Salient events in Bhagavan's life from his birth in Tiruchuzhi through schooldays in Madurai, his experi-

ence of death-state and subsequent travel to Tiruvannamalai, and his taking up abode there as a *jeevan muktha* are narrated in captivating songs. The path of inquiry into the Self which he pointed out to all devotees is beautifully delineated in many songs. There is a piece specially meant to project before children the essentials of a good and meaningful life in the Ramana way.

Some stanzas stand out for the depth of meaning and the core philosophy conveyed by the pithy lines. They are verily inspired writings. Examples are :

''ஆஸ்திகமும், நாஸ்திகமும், ஸர்வ
சமயமுமானாய் ரமணா போற்றி''

"You are,
the theism, the atheism
and all beliefs
Ramana.
Glory be to you!"

''ஏதும் வருவதில்லை, போவதுமில்லை
இருப்பதொன்றே
ஏன் கவலை, 'நான் யார்' ஆராய்ந்தறி''

"Nothing is born,
nothing dies,
the One that exists
lives forever.
So, why worry?
you said.
Discover "Who am I."

''ஆடுவோனும், ஆட்டுவிப்போனும், ஆட்டமும் நீயே
விடுபடுவோனும், விடுவிப்போனும், வீடும் நீயே''

"You are the player, the play-maker, and the play
You are the liberated, the liberator, and liberty."

''எண்ணங்களற்று தெய்வீக எழிலில் இழைந்து மனம் அமைதியுறல்.''

"The mind, free from thought, is at peace,
merging with the divine beauty."

''தன்னையன்றிப் பிறரை ஆராயவே மனம் தூண்டுதே
தன்னையே ஆராய்ந்தறிந்தடங்கல் எந்நாளோ?

"My mind only analyses others,
and never my own self
When is the day coming
when, I am going to be at peace
having understood myself?"

Well-versed in the grammar and diction of Carnatic classical music by regular training in her early years, Smt. Mahalakshmi has set the songs in different classical ragas which would elevate the listener to high levels of contemplative thoughts centred around Bhagavan.

While the Tamil songs would enthral any gathering of Ramana devotees, the English translation provided by Smt. Mahalakshmi herself would help the non-Tamil

participant to imbibe the spirit of each song. This book will be of great value to all *satsangs* devoted to spiritual pursuits.

32-Third Street,
East Abhiramapuram,
Chennai - 600 004.
20th April 1997.

C.V. NARASIMHAN
IPS - Retd.



உ

ஓம் நமோ பகவதே

ஸ்ரீ ரமணாய

முன்னுரை

ஸ்ரீ ரமண பகவானின் அருட்சக்தியானது அதி அற்புதம் நிறைந்தது. அருணாசலத்திலிருந்தபடியே அகில உலக நன்மக்களையும் தன்பால் ஈர்த்து புறம் போகவிடாமல் தன்னடி நிழலில் அமரச்செய்தது. பகவானது ஜீவிய காலத்திலிருந்த பல அடியார்களின் மறக்க முடியாத அனுபவம் இது. இந்த அற்புத ஈர்ப்பு சக்தியானது அன்றுடன் நின்று விடாமல் பகவான் நிர்யாண காலத்திற்கு பிறகும் தொடர்ந்தது. அப்புறம் வந்த அடியார்களின் எண்ணிக்கைதான் எத்தனை எத்தனை?

ஸ்ரீ பகவானது சீரிய மெய்யடியாராகிய பேராசிரியர் ஸ்ரீ ஸ்வாமிநாதன் அவர்களை அறியாத ரமண பக்தர்கள் இருக்க முடியாது. ஆச்ரமத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையவர். இவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு போற்றுதற்குரியது. ஸ்ரீ முருகனாரது பல்லாயிரக் கணக்கான தமிழ்ப்பாடல்களை அச்சேற்றி புத்தக உருவில் ஆக்கித்தந்தவர். இந்த பெரும் பணிக்காக தமிழ்க் கூறும் நல்லுலகம் என்றும் அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளது. இவருக்கு பகவானிடமுள்ள பக்தியும் அன்பும் எல்லையற்றது. இவரது மூத்த செல்வப் புதல்வி ஸ்ரீமதி மஹாலக்ஷ்மிதான் இந்த புத்தகத்தின் பாடல் ஆசிரியை.

முன்னோர் செய்ததை பின்னோரும் தொடர்வது போல, ஸ்ரீமதி மஹாலக்ஷ்மியும் இளவயதிலிருந்தே தம் தந்தையாருடன் வந்து பகவானைப் பலமுறை தரிசித்த பாக்கியம் பெற்றவர். இளமையிலேயே பகவானது அருட்பார்வை இவரது உள்ளத்தில் வித்துளே முளை

போல் பதிந்துவிட்டது. அந்த அருட் சக்தியானது தக்க பருவகாலம் வந்தவுடன் அவரை ரமண நகருக்கே ஈர்த்து அங்கேயே குடியமர்த்திவிட்டது. இவரது கணவர் ஸ்ரீ சூர்யாநந்தன் மிகவும் ஸாத்வீகமும் அடக்கமும் நிறைந்த பண்பாளர். சாந்தமுடன் கூடிய இன்முகத்துடன் பழகும் உத்தமர். பகவானிடம் ஆழ்ந்த பக்தியும் ஈடுபாடும் கொண்டவர். இவர் உத்தியோகத்தில் இருந்து ஒய்வுபெற்ற பிறகு மஹாலக்ஷ்மியுடன் திருவண்ணமலை வந்து ரமணாஸ்ரமத்திற்கு அருகிலேயே வசிக்கலானார். இவரது முழு ஒத்துழைப்பும் மஹாலக்ஷ்மிக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி நல்ல சங்கீத ஞானமுடையவர். கர்நாடக இசையை முறையாகப் பயின்றவர். ச்ருதி லயத்துடன் பாடக்கூடிய திறமையுள்ளவர். எப்போதும் சிரித்த முகத்துடன் பழகும் சுபாவமுள்ளவர். இவர் டில்லியிலிருந்தபோதே பலபேருக்கு ரமண இசையை பயில்வித்தும், தானும் பாடியும் பல நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். ஸ்ரீ முருகனாரது 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' என்ற நூலை எப்போதும் இவர் கையில் பார்க்கலாம். அதிலுள்ள பல பாடல்களுக்கு இவர் இசையமைத்து ஒவ்வொரு 'புனர்வசு' நந்நாளிலும் கோஷ்டியுடன் ஆஸ்ரம புது ஹாலில் சுவை குன்றாது இனிமையாகப் பாடுவார். அப்படி பாடுவதை பெரும் பாக்கியமாக நினைத்து மகிழ்ச்சி அடைவார்.

இப்படி பலகாலமாக பகவானையே போற்றிப் பாடிய அனுபவத்தினால் இவருக்கு பாடல்களைப் புனையும் ஆற்றலும் அருளும் கிடைத்திருக்கிறது. இறையருளினால் உள்ளத்திலிருந்து தானாக தூண்டப்பெற்று வரும் பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு பாடலும் பொருள் பொதிந்த அழகுடன் மிளிர்கின்றது. இதில் வரும் 'ரமணரும், ராமரும்' என்ற

தலைப்பிலுள்ள பாடல் அருமையிலும் அருமை. இந்தப் பாடலில் இருவருக்கும் உள்ள பொருத்தங்களை அழகாக சுட்டிக்காட்டி நம்மை சிந்திக்க வைக்கிறார். பல ராகங்களில் மெட்டமைத்து அதனுள் சொற்கட்டுகளை இணைத்து பாடியிருக்கிறார்.

ஒவ்வொரு பாடலும் ஸ்ரீ பகவானது அருளையும் கருணைக்கடாக்ஷத்தையுமே வேண்டி பாடினாலும், பாடலுக்குப் பாடல் புத்தம் புதிய முறையில் உருவெடுத்து களிநடம் புரிகின்றது. எதுகையும் மோனையும் துள்ளி விளையாடுகிறது. இந்த பாடல்கள் பாடுவோரின் உள்ளத்தையுருக்கி, கேட்போரின் நெஞ்சத்தை நெகிழவைக்கும் திறன் படைத்தவை. மிக எளிய சொற்களைக் கொண்டே கருத்தைக்கவரும் பாடல்களை இயற்றியிருக்கிறார்.

அரும்பத உரைக்கு அவசியமில்லாமலே அரிய பெரிய விஷயங்களை எளிய முறையில் படைத்திருக்கிறார். பலபேர் பாடல்களைப்பாடி ராகத்தை அமைப்பதற்கு இசை கலைஞர்களை நாடுவதுண்டு. இவரோ, பண்ணும் பாடலும் ஒருங்கே இசைத்து தானே பாடியிருப்பது ஒரு தனிச்சிறப்பு. இந்த அழகிய பாமாலையானது இசைப்பிரியர்களுக்கு ஒரு அரிய விருந்தாகும். பகவானது அருளையே வேண்டி பாடப்பெற்ற இப்பாடல்கள் பாடுவோரை இறையருளுக்குப் பாத்திரமாக்கிவிடும் என்பது திண்ணம். இதை இயற்றிய மஹாலக்ஷ்மி அவர்களுக்கு பகவான் எல்லா நலன்களும் தந்து அருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

8.6.97
(புனர்வசு நந்நாள்)

T.R. கனகம்மாள்
ஸ்ரீ ரமணாஸ்ரமம்
திருவண்ணாமலை

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

நன்றியுரை

பாட்டிலே பண்ணை வைத்தார்
பாடுவார்க் கருளும் வைத்தார்
வீட்டிலே யின்பம் வைத்த
வேங்கட விசிட்டனாரே

– ஸ்ரீ முருகனார்

(வைத்தப்பத்து - ஸ்ரீ ரமண சந்நிதிமுறை)

*''நீயே துதிக்க நிகழ்திய தன்றியிந்
நாயேன் துதித்திட நானார்''

என்று ஸ்ரீ முகவைக்கண்ண முருகனாரே கூறியிருக்க, இந்த ''ரமணா போற்றி'' எனும் புத்தகத்திலுள்ள பாடல்களை பாடியுள்ளேன் என்று கூற, நானார்? அவன் அருளினாலே அவனைப்போற்றித் துதிக்குமாறு செய்த பகவான் ஸ்ரீ ரமணரின் கமல கழல்களுக்குத் தலை வணங்குகிறேன்.

1995-டிஸம்பர் 5-ம் தேதி (கார்த்திகை தீபத்திருநாள்) அன்று வெளியிடப்பட்ட ''ஸ்ரீரமண பாமாலை''யிலுள்ள 71 பாடல்களும், இந்த ''ரமணா போற்றி''யிலுள்ள 37 பாடல்களும் சேர்ந்து 108 (அஷ்டோத்திர சத) பாடல்களாய் பகவான் ரமணருக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

தமிழ்மொழி அறியாத பிறமொழியினர் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த 37 பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளேன். இதில் எனக்கு ஆலோசனைகள் கூறி மிகவும் உதவி அளித்தவர், எனது சிறிய தந்தை, டாக்டர் K.S. சஞ்சீவியின் மகள் திருமதி

*ஸ்ரீ ரமண ஞான போதம் - ஒன்பதாம் பாகம் (மூன்றாம் பிரிவு) பக்கம் : 274

கீதா கோபாலகிருஷ்ணன் ஆவர். அவர் பல்வேறு துறைகளில் வெளியிடப்படும் சிறந்த ஆங்கில நூல்களின் படைப்பாளர்களுக்குப் பதிப்பாசிரியையாக அன்புப் பணி புரிந்துவருகிறார். அவருக்கு எனது அன்பு கலந்த நன்றி உரித்தாகும்.

இப்புத்தகத்திற்குத் தமிழில் முன்னுரை எழுதி என்னை கௌரவித்துள்ள நெடுநாள் ரமண பக்தையும், ரமணபகவான் உபதேச நூல்கள் அனைத்திற்கும் உரை எழுதியவரும், அநேக ரமண பக்தர்களின் பெரும் மதிப்புக்கு உரியவருமான திருமதி கனகம்மாள் அவர்கட்கு என் வணக்கம் கலந்த நன்றியினை செலுத்துகிறேன்.

சுமார் பத்து ஆண்டுகள் டில்லி தமிழ் சங்கத்தின் தலைவராய் மிக சிறப்பாக தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்தவரும், டில்லி ரமண கேந்திரத்தின் நிர்வாகக் குழு அங்கத்தினராய் அரும் பணியாற்றியவருமான திரு. C.V. நரசிம்மன் (I.P.S. Retd.) அவர்கள் மனமுவந்து, பல அலுவல்களுக்கிடையே இப்புத்தகத்திற்கு ஆங்கிலத்தில் ஒரு முன்னுரை (Foreword) எழுதியளித்துள்ளமைக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''ஸ்ரீ ரமணபாமாலை''க்கு உதவியது போன்றே ''ரமணா போற்றி''யிலுள்ள எல்லா பாடல்களின் கையெழுத்து பிரதிகளையும், அச்சுப் பார்வைத்தாள் களையும் சரிபார்த்துதவியதற்கு திரு.லா.சு. ரங்கராஜன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

இளம் ஓவியர் திரு. பத்மவாஸன் இப் புத்தகத் திற்கும் முழு ஒத்துழைப்பளித்து பொருத்தமான பல சித்திரங்கள் நேர்த்தியாக வரைந்து, புத்தகத்திற்குக் கலைவடிவம் அமைத்துதவியதற்கு என் இதய பூர்வமான

நன்றி கூறக் கடமைபட்டுள்ளேன். Karthik Offset Press திரு. T.V. வெங்கடராமன் இப்புத்தகத்தை குறித்த காலத்திற்குள் வெகுசிறப்பாக அச்சிட்டமைக்கு நன்றி கூற விழைகிறேன்.

இப்புத்தகத்தை ஸ்ரீ ரமணர் 101-வது அருணை விஜயதினமான செப்டம்பர் முதல் தேதி 1997ல் வெளியிட ஆர்வமுடன் முன்வந்தமைக்கு, டில்லி ரமண கேந்திர நிர்வாக குழுவினருக்கு எனது மனமுவந்த நன்றி.

ஸ்ரீ ரமணாஸ்ரம நிர்வாகக் குழு தலைவர் திரு. V.S. ரமணன் அவர்களுக்கு புகைப்படங்கள் தந்துதவியதற்கு எனது வணக்கம் கலந்த நன்றி உரித்தாகும்.

''ரமணா போற்றி'' யிலுள்ள பாடல்களைப் படித்து, பாடி மகிழும் அன்பர்களுக்கு பகவானின் பூரண ஆசி கிட்ட வேண்டுமாய் பிரார்த்தித்து வணங்குகிறேன்.

19.7.1997
குரு பூர்ணிமா

மஹாலக்ஷ்மி சூர்யாநந்தன்
''அருணாசல சிவா''
ஸ்ரீரமண நகர்,
திருவண்ணாமலை - 606 603.



PUBLISHER'S NOTE

On the auspicious day of Kartikai Deepam two years ago (December 5, 1995), we released at the Kendra premises a book of songs titled "Sri Ramana Paamaalai." It consists of 71 Tamil songs in praise of Bhagavan Sri Ramana Maharshi composed by Mrs. Mahalakshmi Suryanandan, eldest daughter of the late Professor K. Swaminathan, Gandhian Scholar and faithful exponent of Ramana Maharshi's philosophy, and who was also the maker and mentor of our Kendra in the Capital.

That publication has been highly acclaimed by devotees of Sri Ramana as well as others with an ear for music who perceived in the rhymed verses cast in Carnatic ragas an ideal set of devotional songs for rendering by individuals and groups. Since then, a number of non-Tamil devotees have been requesting for an English translation of the verses for imbibing the meaning also while listening to the songs.

Smt. Mahalakshmi has now composed another 37 songs (to make a total of 108) most of them geared to the core philosophy of the Maharshi. She has herself translated them into English. The English version is printed side by side with each song for the benefit of non-Tamils. Discerning readers will find that the translation has been made to achieve the utmost fidelity to the original, both in meaning and movement.

Like the previous one, the cost of publication of this book has also been borne by the Suryanandan

couple, with the entire sale proceeds accruing to Ramana Kendra, Delhi.

The Kendra is gratified to bring out this garland of songs "Ramana Potri" ("Glory Be to You Ramana") to mark the 101st anniversary of the advent of Bhagavan Sri Ramana at Arunachala, falling on September 1, 1997

New Delhi - 3.
Sept. 1, 1997

Ramana Kendra
New Delhi.



உள்ளுறை

		பக்கம்
முன்னுரை (ஆங்கிலத்தில்)	...	... v
முன்னுரை (தமிழில்)	...	... ix
நன்றியுரை	...	... xii
பதிப்புரை (ஆங்கிலத்தில்)	...	... xv

இசைப்பாக்கள்

தலைப்பு	ராகம்	பக்கம்
1. ரமணா போற்றி	ராகமாலிகை	... 3
2. ரமணாவதாரம்	காம்போதி	... 13
3. அழகம்மை மைந்தனே	அஸாவேரி	... 17
4. வாழ்வே ரமணன்	மாண்டு	... 23
5. ரமணரும், ராமரும்	ராகமாலிகை	... 25
6. ஸ்ரீ ரமண சரிதம்	நாதநாமக்கிரியை	... 31
7. ஸ்ரீ ரமண நாமம்	ராகமாலிகை	... 41
8. அனைத்தும் நீயே	அடாணா	... 45
9. காலமிது கலியினதன்றோ?	ஆபோகி	... 47
10. அகத்தில் வந்தமர்வாய்	ஸௌராஷ்ட்ரம்	... 49
11. பிறதெய்வம் அறிந்திலேனே	ஹரிகாம்போதி	... 51
12. அழைத்தால் வருவான்	வலஜி	... 53
13. வந்தான் கதிரவனென	பெஹாக்	... 55
14. அதிசயம், அதிசயம்	மோகனம்	... 57
15. மட நெஞ்சமே	விருத்தம்	... 59

தலைப்பு	ராகம்		பக்கம்
16. எங்கும் நிறைந்தோன்	நாட்டைக்குறிஞ்சி	...	61
17. ஸ்ரீ ரமண சந்நிதி	வாசஸ்பதி	...	65
18. பாப்பா பாட்டு	மாண்டு	...	69
19. ஓடோடியும் வந்தேன்	பைரவி	...	71
20. மனமே, மனமே	யமுனாகல்யாணி	...	73
21. வாழ்வு விரயமாகலாமோ?	ஆஹிரி	...	75
22. உன்னுள் சுடரும் ஒளியே நான்	சிந்துபைரவி	...	77
23. தாராயோ உந்தன் அருள்தனை?	விஜயநாகரி	...	79
24. தீபங்கள் ஏற்றிடுவாய்	காப்பி	...	81
25. அமைதி தாராயோ?	அமீர்கல்யாணி	...	83
26. உலகச்சுழலில்	ஹுஸேனி	...	85
27. இன்றே, இப்பொழுதே	தோடி	...	87
28. ரமணனை நினை நெஞ்சமே	செஞ்சுருட்டி	...	89
29. சரணாகதி	பெஹாக்	...	91
30. நல் விளக்கு	ஹிந்தோளம்	...	93
31. அகப்பேய்	தர்பாரி கானடா	...	95
32. சிவகுரு ரமணா	சுருட்டி	...	97
33. ரமணானந்த கடல்	பீம்ப்ளாஸ்	...	99
34. தரவேண்டும் வரமொன்று	முகாரி	...	101
35. கேளடி கிளியே	கிளிக்கண்ணி (மெட்டு)	...	103
36. ரமண ஸ்மரணம்	நவ்ரோஸ்	...	107
37. வந்தனம் தந்தோம்	மிச்ரயமன்	...	109

CONTENTS

Foreword	...	...	v
Foreword (Tamil)	...	...	ix
Acknowledgment (Tamil)	...	...	xii
Publisher's Note	...	...	xv

ENGLISH TRANSLATION OF THE SONGS

Title of the Song			Page
1. RAMANA, GLORY BE TO YOU!	...	...	2
2. RAMANA AVATARA	...	...	12
3. SON OF AZHAGAMMAL	...	...	16
4. LIVING IN RAMANA	...	...	22
5. RAMANA AND RAMA	...	...	24
6. THE STORY OF RAMANA	...	...	30
7. RAMANA'S NAME	...	...	40
8. YOU ARE EVERYTHING	...	...	44
9. IN KALI YUGA	...	...	46
10. BE SEATED IN MY HEART	...	...	48
11. I KNOW NO GOD BUT YOU	...	...	50
12. CALL HIM — HE WILL COME	...	...	52
13. HE DAWNED ON EARTH	...	...	54
14. A WONDROUS SIGHT	...	...	56
15. FOOLISH MIND	...	...	58
16. YOU ARE EVERYWHERE	...	...	60
17. THE HOLY SHRINE OF RAMANA	...	...	64
18. TO A CHILD	...	...	68
19. I CAME RUNNING	...	...	70

Title of the Song			Page
20. MIND, O MIND	...	...	72
21. CAN THIS LIFE BE WASTED?	...	...	74
22. I AM THE LIGHT	...	...	76
23. BESTOW YOUR GRACE	...	...	78
24. LIGHT THE LAMPS	...	...	80
25. GIVE ME PEACE	...	...	82
26. THE VORTEX	...	...	84
27. TODAY! NOW!	...	...	86
28. THINK OF RAMANA	...	...	88
29. SURRENDER	...	...	90
30. BRIGHT LAMP	...	...	92
31. THE DEMON EGO	...	...	94
32. SIVA GURU RAMANA	...	...	96
33. JOYOUS OCEAN OF RAMANA	...	...	98
34. GRANT ME A BOON	...	...	100
35. TO A PARROT	...	...	102
36. REMEMBER HIM ALWAYS	...	...	106
37. WE SALUTE YOU, RAMANA	...	...	108



ரமணா போற்றி

Ramana
Glory Be To You

1. RAMANA, GLORY BE TO YOU!



Son of Azhagammal and Sundarar,
Beacon light of Aruna,
Ramana.
Glory be to you!

You are
the past, present,
and all times,
Ramana.
Glory be to you!

You are
here, there,
and everywhere,
Ramana.
Glory be to you!

You are
the top, the bottom, and the middle,
the beginning, and the end,
Ramana.
Glory be to you!

You are
male, female, and neuter,
and yet none of these,
Ramana.
Glory be to you!

1. ரமணா போற்றி

ராகமாலிகை தாளம் : ஏகம்

ராகம் : நாட்டை

அழகம்மை சுந்தரர் சுதனே,
அருணைஜோதியே
ரமணா போற்றி

அன்றும், இன்றும்,
என்றும் உள்ளவனே
ரமணா போற்றி

அங்கும், இங்கும்,
எங்கும் நிறைந்தோனே
ரமணா போற்றி

அடி, முடி, நடுவும்,
ஆதி அந்தமுமானவனே
ரமணா போற்றி

அலியும், பெண்ணும், ஆணும்,
அல்லையுமானாய்
ரமணா போற்றி

You are
high, low
and all else,
Ramana.
Glory be to you!

You are
smaller than the atom
and larger than the cosmos,
Ramana.
Glory be to you!

You are
amritham, the elixir
that dispels the cycle of births,
Ramana.
Glory be to you!

You are
the theism, the atheism,
and all beliefs
Ramana.
Glory be to you!

You are
song and dance,
speech and silence,
Ramana.
Glory be to you!





அஃறிணையும், உயர்திணையும்,
யாவுமானாய்
ரமணா போற்றி

அணுவுள் அணுவும்,
அண்டப்ரம்மாண்டமுமானாய்
ரமணா போற்றி

அமுதமென பிறவிப்பிணி
ஆற்றும் அருமருந்தே
ரமணா போற்றி

ராகம் : ஆரபி

ஆஸ்திகமும், நாஸ்திகமும்,
ஸர்வசமயமுமானாய்
ரமணா போற்றி

ஆடலும், பாடலும்,
மொழியும், மோனமுமானாய்
ரமணா போற்றி



You are
joy and sorrow,
good and evil,
Ramana.
Glory be to you!

You are
everything from the fly and ant
to the Sun and Moon,
Ramana.
Glory be to you!

You are
form and formless,
movable and immovable,
Ramana.
Glory be to you!

You are
the food that we eat,
the flowers that we smell,
Ramana.
Glory be to you!



You are inner and outer,
east, west, and all directions,
Ramana.
Glory be to you!



இன்பு, துன்பு, நல்லன,
அல்லன எலாமானாய்
ரமணா போற்றி

ஈ, எறும்பு முதல்,
சூரிய சந்திரனுமானாய்
ரமணா போற்றி

உருவமும், அருவமும்,
சராசரமுமானாய்
ரமணா போற்றி

உண்ணும் உணவும்,
நுகரும் மலருமானாய்
ரமணா போற்றி

உள், வெளி, மேல், கீழ்,
திசையாவுமானாய்
ரமணா போற்றி



You are
that which is rooted, crawling,
walking, flying,
Ramana.
Glory be to you!

You are
the sea, the sand,
the hill, the sky, and the storm,
Ramana.
Glory be to you!

You are
dawn, dusk, night,
and all times,
Ramana.
Glory be to you!

You are
heat and cold,
rain and snow,
Ramana.
Glory be to you!

You are
the five elements —
space, air, fire, earth, water—
Ramana.
Glory be to you!





ஊர்வன, நடப்பன, நிற்பன,
பறப்பன யாவுமானாய்
ரமணா போற்றி

ராகம் : அடாணா

கடல், தரை, மலை,
விசும்பும், புயலுமானாய்
ரமணா போற்றி

காலை, மாலை, இரவு,
காலமெலாமானாய்
ரமணா போற்றி

வெயில், குளிர், மழையும்,
பனியுமெலாமானாய்
ரமணா போற்றி

வெளி, வளி, தீ, மண்,
நீரென ஐம்பூதமானாய்
ரமணா போற்றி



You are
older than the oldest,
newer than the newest,
Ramana.
Glory be to you!

You are
the spark that shines
I, I, in all beings,
Ramana.
Glory be to you!

You are
beyond thought, speech,
and intellect,
Ramana.
Glory be to you!

The Paramatma
who, in his grace,
has made me his own,
Ramana.
Glory be to you!





பழமைக்கும் பழமையாய்,
புதுமைக்கும் புதுமையானாய்
ரமணா போற்றி



யாவருள்ளும் ''நான், நான்''
என ஒளிரும் சுடரே
ரமணா போற்றி

மனம், வாக்கு, புத்திக்கும்
எட்டாப்பொருளே
ரமணா போற்றி

மனமுவந்தெனையும்
ஆண்ட பரமாத்மனே
ரமணா போற்றி

2. RAMANA AVATARA

Ramana, O spark of compassion,
your holy *avatar* is most unique,
— a mystery indeed!



An ember from Arunagiri,
the column of fire,
grew as Ramana in Tiruchuzhi
in pious Azhagammal's womb.

With 'Arunachala, Arunachala'
constantly echoing within you,
A relative's remark, "I come from Arunachala,"
evoked in you, a mere lad of sixteen,
the strong desire to seek
Your Father in Arunachala.



2. ரமணாவதாரம்

ராகம் : காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

அருட்சுடரே, ரமணா, உந்தன் திருவவதாரம்
அருமையினும் அருமை; பெரும் மர்மமன்றோ?
(அருட்சுடரே)

அனுபல்லவி

அருணகிரியாம் அங்கிபிழம்பின்பொறி, திருச்சுழி
பதியில்
அருந்தவ அன்னை அழகம்மையினுள் ரமணனாய்
உருவானதே
(அருட்சுடரே)

சரணம்

1. ''அருணாசலம், அருணாசலம்'' என ஸதா
தனக்குள் ஒலிக்கவும்
அருணையினின்று வருகிறேனென உறவினர்
கூறவும்
அருணையடைய ஆவலெழ தந்தையைத் தேடி
செல்கிறேனென
அருணைபயணமான பதினாறு வயது பாலகனே
(அருட்சுடரே)

To the Lord in the temple of Arunachala,
"Father, I have come," you said.
For four and fifty years, you shone
as the preceptor of *Advaita.*
Attaining *nirvana* in Arunachala,
You merged as a light into the hill
— an inexpressible wonder indeed!



2. அருணையாலய ஈசனிடம் ''அப்பனே
வந்தடைந்தேன்'' என்றனையே
அருணையில் ஐம்பத்து நான்காண்டு அத்வைத
ஆசார்யனாய் ஒளிர்ந்தனையே
அருணையில் நிர்வாணப்போது அருட்ஜோதி
வடிவமதாய்
அருணகிரியில் ஒன்றிய அதிசயம் உரைத்திட
வல்லதோ?
(அருட்சுடரே)



3. SON OF AZHAGAMMAL

Son of Azhagammal,
living in Aruna,
being my father and mother
bestow your grace on me.

The column of fire
without beginning nor end
the Lord incarnated.

You came to spread
on earth the light of
knowledge,
and your handsome face
and enchanting smile
took over our hearts.

You conquered death
at a tender age,
Teacher of silence,
of unparalleled fame.

You gave us
Upadesa Undhiyar and
Ulladu Narpadu,
and lived in a way
that struck us with wonder.

'' இன்முகத்தின் நகையால் உளங்கவர்ந்தவனே ''

3. அழகம்மை மைந்தனே

ராகம் : அஸாவேரி தாளம்: ஆதி

பல்லவி

அழகம்மை மைந்தனே, அருணை வாஸனே
அம்மையப்பனே அருள்புரிவாய்
(அழகம்மை)

சரணங்கள்

1. ஆதியுமந்தமுமிலா அங்கியுருவானவனே
ஆண்டவனே அவனியிலவதரித்தவனே
(அழகம்மை)

2. இப்புவியில் ஞானஒளி வீச உதித்தவனே
இன்முகத் திளநகையால் உளங்கவர்ந்தவனே
(அழகம்மை)

3. ஈரெட்டுவயதில் மரணத்தை வென்றவனே
ஈடில்லா புகழ்சேர் மௌனோப தேசிகனே
(அழகம்மை)

4. உபதேச உந்தியார், உள்ளது நாற்பதும் தந்தவனே
உலகோர் வியக்க உலகில் வாழ்ந்து காட்டியவனே
(அழகம்மை)





Your penetrating glance of grace
destroying the *karma*
of devotees,
made us understand
this body is but a garment.

The Soul is indestructible
and everlasting,
so you said,
always absorbed as you were
in the Self.

Nothing is born,
nothing dies,
the One that exists
lives forever.
So, why worry?
you said.
Discover "Who am I."

You assured us,
to attain Self-knowledge is simple,
and there is no doubt
everyone will realise the Self.

The personification of Truth,
the incomparable one,
you taught us
the One that exists
is the same in every being.

5. ஊடுருவும் அருள் விழியால் அடியர் ஊழ்வினை
மாய்த்தவனே
ஊனுடல் வெறும் உடையென உரைத்தவனே
(அழகம்மை)

6. என்றும் உள்ளது அழிவிலாததாத்மா என்றவனே
என்றும் ஆன்மானுபவத்தில் லயித்திருந்த
பகவனே
(அழகம்மை)

7. ஏதும் வருவதில்லை, போவதுமில்லை,
இருப்பதொன்றே
ஏன் கவலை, ''நான் யார்'' ஆராய்ந்தறி என்ற
உத்தமனே
(அழகம்மை)

8. ''ஐயே, அதிசுலபம் ஆன்மவித்தை'' என
பகர்ந்தவனே
ஐயமில்லை உண்டனைவர்க்கும் வீடு -
பேறென்றருளியவனே
(அழகம்மை)

9. ஒப்புயர்விலா உண்மைப் பொருளானவனே
ஒன்றேயுள்ளது யாவருள்ளுமென விளக்கியவனே
(அழகம்மை)



Without a form
without a name,
yet you are called Ramana.
You,
the sound
the light
the sacred *Aum.*

The exemplar of unending
loving grace,
the ambrosia, the rare medicine
that destroys the cycle of births.



10. ஒருரு ஓர்பெயருமிலாதும் ரமணநாமம்
சூடியோனே
ஓங்கார ரூபனே, ஓசை ஒளியானவனே
(அழகம்மை)

11. ஒளவையினும் அன்புபொழியும் உதார
குணாளனே
ஒளடதமென பிறவிப்பிணி போக்கும்
அருமருந்தே
(அழகம்மை)



4. LIVING IN RAMANA

The tongue that constantly utters not "Ramana,
Ramana",
is that a tongue at all?

The hand that offers not fragrant flowers to Ramana,
is that a hand at all?

The leg that circumambulates not Ramana,
is that a leg at all?

The head that bows not to the lotus feet of Ramana,
is that a head at all?

The eye that sees not the shining magnetic glance of
Ramana,
is that an eye at all?

The ear that hears not the roar of the silent teaching of
Ramana,
is that an ear at all?

The heart that melts not at the thought of the grace of
Ramana,
is that a heart at all?

The life that knows not the I, I glowing in the heart is
Ramana,
is that a life at all?

4. வாழ்வே ரமணன்

ராகம் : மாண்டு | தாளம்: திரிபுடை (கண்ட ஜாதி)

பல்லவி

ரமணா, ரமணா என நாளும் நவிலாத நாவை
நாவெனலாமோ?
ரமணா, ரமணா என நறுமலர் தூவி குவியாத
கரத்தை கரமெனலாமோ?
(ரமணா)

அனுபல்லவி

ரமணனை தினம் தினம் வலம் வராத காலை
காலெனலாமோ?
ரமணனின் தாமரைத்தாள்தனை வணங்காத தலையை
தலையெனலாமோ?
(ரமணா)

சரணம்

ரமணன் காந்தக் கண்ணொளியைக் காணாத
கண்ணை கண்ணெனலாமோ?
ரமணன் மோனோபதேச கர்ஜனை கேளாத காதை
காதெனலாமோ?
ரமணன் இன்னருள் நினைந்து நைந்துருகாத
நெஞ்சை நெஞ்செனலாமோ?
ரமணன் ''நான், நான்'' என இதயத்தொளிர்வதுணராத
வாழ்வை வாழ்வெனலாமோ?
(ரமணா)

5. RAMANA AND RAMA

In *kali yuga*
Sri Ramana is the *avatara* of Sri Rama.

Sri Rama is the ornament of the Sun dynasty
Sri Ramana is the Sun of Knowledge.

Were they not born under the same *Punarvasu*?
Is not Venkata Rama the name his parents
gave Sri Ramana?

Sri Rama, to keep his father's word,
Left Ayodhya for Dandakaranya.
Sri Ramana, heeding his Father's call,
left Madurai for Annamalai.

Sri Rama upheld his mother's command
Sri Ramana freed his mother from repeated births.

Young Lakshmana waited at Rama's bidding
Young Niranjanananda was at Sri Ramana's call.

Sri Rama bestowed *moksha* on the eagle, Jatayu
So did Sri Ramana liberate a crow.
Were they both not surrounded always by monkeys
and squirrels?

Sri Rama enjoyed the fruit tasted by the faultless
Sabhari
Sri Ramana took delight in *'keerai paatti'*s cooking.



5. ரமணரும், ராமரும்

ராகமாலிகை தாளம் : ரூபகம்

பல்லவி

ராகம் : கல்யாணி

ஸ்ரீராமரே கலியில் ஸ்ரீ ரமணராய் அவதரித்தாரே
(ஸகல கல்யாண குண)
ஸ்ரீராமர் சூர்யகுலதிலகம்; ஸ்ரீ ரமணர் ஞான
சூர்யனன்றோ?
(ஸ்ரீராமரே)

அனுபல்லவி

ராகம் : தோடி

ஸ்ரீராமரும் ஸ்ரீரமணரும் அவதரித்தது புனர்வசு
திருநாளன்றோ?
ஸ்ரீரமணரின் தாய் தந்தை சூட்டிய திருநாமம்
வேங்கட-ராமனன்றோ?
ஸ்ரீராமர் தந்தை சொல் காக்க, அயோத்தி துறந்து
தண்டகாரண்யம் சென்றாரே
ஸ்ரீரமணர் தந்தை சொல்கேட்டு, மதுரை துறந்தோடி
அண்ணாமலை அடைந்தாரே
(ஸ்ரீராமரே)



Sri Rama, clothed in bark, roamed the forests of
Dandakaranya
Sri Ramana, clad in his loin-cloth, walked the woods
of Annamalai.

At the touch of Sri Rama's holy feet,
the stone – Ahalya – attained her true form
At the birth of Sri Ramana,
a blind woman saw light and became blessed.

Sri Rama ruled in Ayodhya with Sita Devi
Sri Ramana reigns in Tiruvannamalai with
"Mukti Devi"

Sri Rama and Sri Ramana were the embodiments of
dharma
Sri Rama and Sri Ramana were born on this earth
so that Truth may last and Peace prevail.



சரணம்

1. ராகம் : சிவரஞ்சனி

ஸ்ரீராமர் தாய்வார்த்தை தள்ளலாகாதென
நிரூபித்தாரே
ஸ்ரீரமணர் தாய்க்குப் பிறப்பிறப்பிலா
வீடுபேறு தந்தாரே
ஸ்ரீ ராமருக்குப் பணிவிடை புரிய இளையோன்
இலக்குமணன் காத்திருந்தனனே
ஸ்ரீரமணருக்கு சேவை செய்ய சிறியோன்
நிரஞ்சனாநந்தன் வந்தடைந்தனனே
(ஸ்ரீராமரே)

2. ராகம் : கமாஸ்

ஸ்ரீராமர் ஜடாயுவுக்கும், ஸ்ரீரமணர் காக்கைக்கும்
மோக்ஷம் ஈந்தனரே
ஸ்ரீராமரையும், ஸ்ரீரமணரையும் ஸதா வானரங்கள்
அணில்கள் சூழ்ந்திருந்தனவே
ஸ்ரீராமர் ஆசையாக மாசில் சபரி ருசித்த
பழத்தைப் புசித்தாரே
ஸ்ரீரமணர் அன்பாய் கீரைப்பாட்டி ஆக்கியளித்த
உண்டி ஆவலாய் உண்டாரே
(ஸ்ரீராமரே)

3. ராகம் : பாக்யஸ்ரீ

ஸ்ரீராமர் மரவுரி தரித்து தண்டகாரண்யத்தில்
சஞ்சரித்தாரே
ஸ்ரீரமணர் கோவணாண்டியாய் அண்ணாமலை
கானகத்தே நடந்தாரே

ஸ்ரீராமர் திருவடிபட கல்லாம் அகல்யை
தன்னுரு அடைந்தனளே
ஸ்ரீரமணர் பிறக்க பார்வையிலா மாது ஒளிகண்டு
பாக்யஸ்ரீ ஆயினளே
(ஸ்ரீ ராமரே)

4. ராகம் : ஸ்ரீ ராகம்

ஸ்ரீராமர் சீதா தேவியுடன் அயோத்திமாநகரில்
அரசு புரிந்தாரே
ஸ்ரீரமணர் முக்திமகளுடன் திருவண்ணாமலையில்
கொலு வீற்றுள்ளாரே
ஸ்ரீராமரும், ஸ்ரீரமணரும் மானிட தர்மம் யாதென
வாழ்ந்து காட்டினரே
ஸ்ரீராமரும், ஸ்ரீரமணரும் சத்தியம் நிலைக்க,
சாந்தி நிலவ உலகில் உதித்தனரே.
(ஸ்ரீராமரே)



6. THE STORY OF RAMANA

O brothers and sisters,
Come running hither,
Let us sing Ramana's story
Let us become like Ramana.

In the holy town of Tiruchuzhi,
under the sacred star *Punarvasu*
was born Venkataraman,
to father Sundaram Iyer
and mother Azhagammal.

The boy grew up fast,
charming all who saw him,
greatly interested in sports he was,
running, jumping, swimming.

Always surrounded by friends,
happy times they had together,
deeply would he sleep at night
nothing could shake him awake.

When he was studying in Dindigul,
suddenly his father passed away.
He made the move then to Madurai
to continue his schooling there.

He was in class ten then
but studies did not hold his interest.
To discover what death meant
he acted dead and gained realisation.

6. ஸ்ரீ ரமண சரிதம்

ராகம் : நாதநாமக்கிரியை தாளம்: ஏகம்
(மத்யம ஸ்ருதி)
(''பஜகோவிந்தம்'' மெட்டு)

1. அண்ணா, தம்பி ஓடி வாரீர்
அக்கா, தங்கை ஓடி வாரீர்
ரமணர் சரிதம் பாடலாம்
ரமணர் போல ஆகலாம்

2. புண்ணிய தலமாம் திருச்சுழிபதியில்
புனர்வஸுவில் பிறந்தான் வேங்கடராமன்
தந்தை பெயர் சுந்தரம் ஐயர்
அன்னை நாமம் அழகம்மை

3. பாலன் பாங்காய் வளர்ந்தான்
பார்ப்பவர் கண்ணைக் கவர்ந்தான்
ஆட்டத்திலே நாட்டம் அதிகம்
ஆடி, குதித்தோடி நீந்துவான்

4. நண்பர் பலர் கூடவே இருந்தனர்
நன்றாய் விளையாடி மகிழ்ந்தனர்
ஆழ்ந்து தூங்குவான் இரவினில்
அடித்துதைத்துக் கட்டினும் விழித்திடான்

5. திண்டுக்கல்லில் படிக்கும் போது
தீடீரென தந்தை இறந்திட்டாரே
பிறகு, மதுரை நகர் சென்றான்
பள்ளியில் கல்வியும் பயின்றான்

In Madurai, to the temple he would go
to pay obeisance to goddess Meenakshi.
To the sixty-three Saiva saints, too,
asking that he become like them.

One day, there came a guest,
"I am from Tiruvannamalai", he said.
Hearing this, Venkataraman was overjoyed,
and longed to go to that holy place.

He left a letter for his brother,
and set out for Annamalai.
In Ariyanainallur, when he arrived,
he saw a wondrous, luminous light.

On Krishna's birthday, he reached Kizhur.
The brahmin's wife thought he was Krishna
in person.
She gave him the *prasad* meant for Krishna,
and the boy Krishna appeased his hunger.

No money in hand, tired of walking,
he pledged the rings on his ears.
Four rupees he got in exchange
and went on his journey by train.

Early in the morning he reached Annamalai,
swiftly he went into the temple.
He stood praying to Lord Annamalai,
"Father Annamalai, I have come to you."

6. ஒரு நாள் உறவினர் ஒருவர் வந்தார்
திருவண்ணாமலையிலிருந்து என்றார்
திருவுளம் மிக மகிழ்ந்த வேங்கடராமன்
திருவண்ணாமலை போகத் துடித்தான்

7. பத்தாம் வகுப்பு படித்து வந்தான்
படிப்பில் நாட்டம் பதியவில்லை
மரணம் என்பதென்ன என்று
மரித்தவன் போல் இருந்தாய்ந்துணர்ந்தான்

8. மதுரையில் கோயில் செல்லுவான்
மீனாக்ஷியை வணங்குவான்
அறுபத்து மூவரைத் துதிப்பான்
அன்னார் போலாக விரும்புவான்

9. அண்ணனுக்குக் கடிதம் வரைந்தான்
அண்ணாமலைக்குப் பயணம் ஆனான்
அரையணி நல்லூருக்கு வந்தான்
அங்கே அருட்பெருஞ்சோதியைக் கண்டான்

10. கண்ணன் பிறந்த நாள் கீழூர் அடைந்தான்
கண்ணனெனவே வேதியர் மனைவி
கண்ணனுக்காக்கிய தின்பண்டம் தந்தாள்
கண்ணன் பாலனும் பசி தீர்ந்தான்

11. கையில் காசில்லை; நடந்து களைத்தான்
காது கடுக்கனை அடகு வைத்தான்
ரூபாய் நான்கு பெற்றுக்கொண்டான்
ரயில் வண்டி ஏறி பயணம் தொடர்ந்தான்

On the banks of Ayyankulam,
he discarded all that he had,
tore away his *dhoti,* shaved his head,
girt in a loin-cloth he remained.

Fully drenched in pouring rain,
in ecstasy he entered the temple,
sat in the Hall of Thousand Pillars
and was immersed in deep meditation.

As little boys threw stones at him,
he sought refuge in the *padala linga* cave.
It was the *mahan* Seshadri
who took care of the young ascetic.

In Gurumurtham where he went next,
surrounded he was by devotees.
His mother Azhagammal, in distress,
approached him later in Pavazhakundru.

She requested the silent swami to speak,
she asked him to return home with her.
Wrote the silent sage on paper,
"What has been ordained will take place."

Sadly, his mother returned home.
While in Virupaksha cave the swami took
residence,
there came Ganapathi Muni to see him,
fell at his feet, cleared of his worries.

12. அதிகாலை அண்ணாமலை வந்தடைந்தான்
ஆலயத்துள் விரைந்தோடி சென்றான்
அண்ணமலையாரைத் தொழுது நின்றான்
அண்ணாமலையப்பா வந்தடைந்தேனென்றான்

13. ஐயன் குளத்துக் கரைக்குச் சென்றான்
கைவசமிருந்த தனைத்தும் எறிந்தான்
வேட்டியைக் கிழித்து கோவணம் அணிந்தான்
வேண்டி, நாவிதன்வரவே முடி களைந்தான்

14. பெய்த மழையில் முழுதும் நனைந்தான்
பரவசமாய் ஆலயத்துட் சென்றான்
ஆயிரங்கால் கூடம் அமர்ந்தான்
ஆழ்ந்த சமாதியில் மூழ்கினான்

15. பாலர் அவன்மேல் கல்லெறிய
பாதாளலிங்க குஹை ஏகினான்
பாலத்துறவியை மஹான் சேஷாத்திரி
பகலிரவாய் பாதுகாத்தனரே.

16. பாலசாமியும் குருமூர்த்தம் சென்றார்
பல அடியர் சூழ்ந்து பணியாற்றினர்
பின்பு, பவளக்குன்று சென்றாரங்கு
பதைத்தோடி அழகம்மை வந்தனளே

17. மௌனசாமியைப் ''பேசு'' என்றாள்
மனம் நொந்து ''என்னுடன் வா'' என்றாள்
தலைவிதிப்படித்தான் நடக்குமென்று
தாளில் எழுதினார் மோனசாமி

"O, my countrymen, know you this,
He is Bhagavan Maharshi Ramana", the *muni*
proclaimed.
When to Skandashramam Ramana moved,
his compassionate mother returned to his side.

His younger brother Nagaswami joined him,
assumed the name Niranjanananda,
took over the running of the ashramam,
and the mother cooked for the devotees.

The happy mother suddenly fell ill,
the Maharshi released her from repeated births.
Her *samadhi* was at the foot of the hill,
where arose the temple of Matrubhuteswara.

At that spot, stayed Guru Ramana.
Ramana Ashramam grew around it.
Rare and great poet Muruganar and *bhaktas*
from world-over thronged the place.

Ramana is the personification of *ahimsa,*
squirrels, monkeys, peacocks, played about
cows and dogs and cats, too,
some have *samadhis* in the ashram.

Singing the *Akshara Manamalai,*
Ramana, with his devotees, went round the hill.
He composed *Ulladu Narpadu*
and *Upadesa Undhiyar* too.

18. வருந்தியே வீடு சென்றாள் தாயும்
விருபாக்ஷ குகை சென்றார் சாமியும்
கணபதி முனியும் காண வந்தார்
காலில் விழுந்து கவலை தீர்ந்தார்

19. ''மாநிலத்தோரே, அறிந்திடுவீர், பகவான்
மஹரிஷி ரமணர் இவரே'' என்றார்.
கந்தாசிரமம் சென்றார் ஸ்ரீ ரமணர்
கருணைத்தாயும் வந்துடன் தங்கினள்

20. நாகசாமி தம்பியும் வந்தடைந்தார்
நிரஞ்சனாநந்தன் நாமம் பூண்டார்
ஆசிரம நிர்வாகம் மேற்கொண்டார்
அன்னையும் அன்பர்க்கமுதளித்தாள்

21. மகிழ்ந்திருந்த அன்னை நோயுறவே
மஹரிஷி பவபயம் நீக்கி மோக்ஷமீந்தார்
மலையடிவாரத்தில் சமாதி வைத்தார்
மாத்ரு பூதேஸ்வரர் ஆலயம் எழும்பிற்று

22. அங்கேயே குருரமணர் தங்கினார்
அதுவே ரமணாசிரமம் ஆயிற்று
அரும் பெரும் புலவர் முருகனாரும்
அகில உலகோரும் அங்கு வந்தனரே

23. அஹிம்ஸாமூர்த்தி ஆவர் ரமணர்
அணிலும், குரங்கும், மயிலும் ஆடும்
ஆவினம், நாய், பூனை விளையாடும்
ஆச்ரமத்தில் உண்டு சமாதி அவைகட்கும்

Playfully, he wrote the *appalam* song.
sang that Self-knowledge is simple indeed.
Enquire deeply into "who am I?"
that is the path of self-realisation.

A growth was noticed on the Master's hand
Alas! the doctors pronounced sarcoma.
"It is the false body that is destroyed,
the *atman* lives forever," Ramana consoled.

To the strains of *Arunachala Siva* sung by devotees,
a brilliant light emanating
mingled with the Annamalai hill.
Ramana became Arunachala Siva himself.

Arunachala Siva Ramana, namo, namo!
Arunachala Siva Ramana, namo, namo!
Arunachala Siva Ramana, namo, namo!



24. ''அக்ஷரமணமாலை'' அருளியவண்ணம்
அடியாருடன் கிரிவலம் வந்தார்
''உபதேசவுந்தியார்'' உபதேசித்தார்
''உள்ளது நாற்பது''ம் உருவாக்கினார்

25. ''அப்பளப்பாட்டு''ம் விளையாட்டாய் ஈந்தார்
''அதிசுலபம் ஆன்மவித்தை'' என்றிசைத்தார்
ஆய்ந்தறிவாய் ''நான் யார்'' என்று,
ஆன்ம ஞான நெறி அதுவே, என்றார்

26. ஐயன் கையில் கட்டி கண்டது
ஐயகோ! வைத்தியர் புற்றுநோய் என்றனர்
''அழிவது பொய்யுடல் தான்'', என்றார்
ரமணர்
''அழியாதது என்றும் ஆன்மா,'' என்றார்

27. ''அருணாசலசிவ'' என அன்பரிசைத்தனர்
அரும்பெருஞ்சோதி எழக்கண்டனர்
அண்ணாமலையிற் ஜோதி கலந்திட
அண்ணாமலைச் சிவனானாரே ரமணர்.

28. அருணாசல சிவ ரமணா நமோ நமோ
அருணாசல சிவ ரமணா நமோ நமோ
அருணாசல சிவ ரமணா நமோ நமோ
அருணாசல சிவ ரமணா நமோ நமோ



7. RAMANA'S NAME

It is beautiful and holy
the name, Sri Ramana
It is elegant and sweet as honey
the name, Sri Ramana
It grants all that is good
the name, Sri Ramana
It delights us for ever
the name, Sri Ramana
It protects us always
the name, Sri Ramana
It redeems us in this world and after
the name, Sri Ramana
It makes us shine as the Self
the name, Sri Ramana
It destroys the fear of death
the name, Sri Ramana
It offers refuge at his lotus feet
the name, Sri Ramana
It releases us from bonds of attachment
the name, Sri Ramana
It ferries souls across the sea of births
the name, Sri Ramana
It explains who I am
the name, Sri Ramana
It dances in my heart as I, I,
the name, Sri Ramana
It perfumes the tongue and strengthens the mind
the name, Sri Ramana

7. ஸ்ரீ ரமண நாமம்

ராகமாலிகை தாளம்: ரூபகம்
மத்யம ஸ்ருதி

ராகம் : புன்னாகவராளி

1. நாமம் அதிசுந்தர திவ்ய நாமம் ஸ்ரீ ரமண நாமமே
நாமம் அழகான மதுர நாமம் ஸ்ரீ ரமண நாமமே
நாமம் சொல்லச் சொல்ல இனிக்கும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
நாமம் நல்லன யாவும் நல்கும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே

ராகம் : யமுனாகல்யாணி

2. நம்மை நாளும் மகிழ்விக்கும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
நம்மை என்றென்றும் காக்கும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
இம்மை மறுமை உய்விக்கும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
நம்மை நாமாய் ஒளிர்விக்கும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே

ராகம் : நாதநாமக்கிரியை

3. மரணபயம் நீக்கிடும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
சரணகமலத் தபயமளிக்கும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே

It removes all stress and strain
the name, Sri Ramana
It showers peace and blessings
the name, Sri Ramana
It makes life thrive in joy
the name, Sri Ramana
It is the ambrosia that bestows *moksha*
the name, Sri Ramana.



பந்த தொந்தம் போக்கிடும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
பவக்கடல் கடத்திசெல்லும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே

ராகம் : செஞ்சுருட்டி

4. நான் யாரென விளக்கும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
நான் நானென இதயத்தாடும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
நா மணக்க மனவுறுதி தரும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
நம் சொரூபமாய் சுடரும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே

ராகம் : சிந்துபைரவி

5. அல்லலனைத்தும் அகற்றிடும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
அமைதி நிலவ மங்களமருளும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே
ஆருயிராய் தழைக்கும் ஆனந்தநாமம்
ஸ்ரீ ரமண நாமமே
ஆரமுதாய் அழியா நிலையீயும் நாமம்
ஸ்ரீ ரமண நாமமே

ஸ்ரீ ரமண நாமமே, ஸ்ரீ ரமண நாமமே;
ஸ்ரீ ரமண நாமமே

8. YOU ARE EVERYTHING

You are the player, the play-maker, and the play
You are the singer, the songwriter, and the song
You are the united, the uniter, and the union
You are the adorned, the adorner, and the adornment
You are the moved, the mover, and the movement
You are the searched, the searcher, and the search
You are the liberated, the liberator, and liberty.

Knowing that everything is You and You are me,
I rest in peace.



5.4.24

5/4/24

8. அனைத்தும் நீயே

ராகம் : அடாணா தாளம்: ஆதி

பல்லவி

ஆடுவோனும், ஆட்டுவிப்போனும், ஆட்டமும் நீயே
பாடுவோனும், பாட்டுவிப்போனும், பாட்டும் நீயே
(ஆடுவோனும்)

அனுபல்லவி

கூடுவோனும், கூட்டுவிப்போனும், கூடுதலும் நீயே
சூடுவோனும், சூட்டுவிப்போனும், சூடுதலும் நீயே
(ஆடுவோனும்)

சரணம்

ஓடுவோனும், ஓட்டுவிப்போனும், ஓட்டமும் நீயே
தேடுவோனும், தேட்டுவிப்போனும்,
தேட்டமும் நீயே
விடுபடுவோனும், விடுவிப்போனும், வீடும் நீயே
என்றுணர்ந்து
ஒடுங்கி, நீயே நானானாய்
எனத்தெளிந்தோய்ந்தடங்கேனோ?
(ஆடுவோனும்)



9. IN KALI YUGA

In this *kali yuga*, Ramana,
let me chant your name all my life.

You, the conqueror of Yama,
To save all living beings,
did you not walk, stung by wasps,
amidst the stones of the Annamalai forests?

A hardhearted *bhogi* though I am,
I pray for your grace always,
singing to you in *Abhogi*.

Save me ere Yama consumes me
O Ramana, redeem me.



9. காலமிது கலியினதன்றோ?

ராகம் : ஆபோகி   தாளம்: ரூபகம்

பல்லவி

காலமிது கலியினதன்றோ, ரமணா - எந்தன்
காலமெல்லாம் உந்தன் நாமமே பாடி பஜிக்க
அருளாய்
(காலமிது)

அனுபல்லவி

காலனைக் காலால் உதைத்த காலகாலனே,
உயிரினம் உய்யவே நீ
கால் கடுக்க, கல் தடுக்க, கதண்டு கொட்ட
அண்ணாமலை காடெலாம் நடந்தனையோ?
(காலமிது)

சரணம்

காலாதீத ரமணா, கலியுக வரதா, கல்நெஞ்சனேன்
எனினும் - எக்
காலமும் அபயம் வேண்டி ஆபோகியில்
ஆராதிக்கும் இப்போகியை
காலாகாலத்தில் கொடும் காலன் கவ்வுமுன்னே
காத்து அபயமருளி
காலாந்தக சிவரமணா, எனையும் ஆண்டு
கடைத்தேற்றிடுவாயே
(காலமிது)

10. BE SEATED IN MY HEART

Do I have any refuge
    other than your golden feet,
I who sing your praise
    day and night?

Just as the cloud moves away swiftly
    revealing the moon in the sky
bestow your grace, remove my ego fast
    reveal my true Self.

Spurn me not as an inert being
    whirling in the world of illusion
Scorn me not, dispel my inner darkness
Scoff at me not, destroy my passions.

Come and shine forth brilliantly,
Be seated in my heart,
I entreat you, O Ramana!



10. அகத்தில் வந்தமர்வாய்

ராகம் : சௌராஷ்ட்ரம் தாளம்: ரூபகம்

பல்லவி

பகலிரவாய் உந்தன் புகழே பாடி பரவிடும்
எந்தனுக்கு
புகலிடம் உந்தன் பொற்பாதமே அன்றி
வேறுண்டோ, புகலாய் – ரமணா
(பகலிரவாய்)

அனுபல்லவி

மேகம் வானில் மதியை மறைக்கினும் விரைந்தே
விலகிடுமாப்போலே – எந்தன்
அகந்தையும் அறவே அகன்று, ஆன்ம ஸ்வரூபம்
விளங்க அருள்வாயே
(பகலிரவாய்)

சரணம்

ஜகமாயையில் உழலும் எனை, ஜடமென எள்ளிக்
கழியாது
அகயிருள் அழிய, அடியேன் ஆவலுடன் உனை
அழைக்க
அக நகைக்காது, எந்தன் ஆசாபாசம் அழித்து
''தக, தக'' யென சுடர்விட, எந்தன் அகத்தில் நீ
வந்தமர்வாயே
(பகலிரவாய்)

11. I KNOW NO GOD BUT YOU

Ramanesa,
I know no god but you.
Protect me,
I sing your praise night and day.

Ramanesa,
the lover of *samagana,*
beloved of those
who seek your succour.

Delay not any more
remove my ignorance
relieve my anguish
reclaim me.

The column of fire
whose beginning and end
Hari and Brahma
tried in vain to find
I beseech you, singing your praise.

Filled with grace,
saviour of the fallen
Lord supreme
the most holy.

Don't make fun of me
fool though I may be
come to my aid
give me salvation.



11. பிற தெய்வம் அறிந்திலேனே

ராகம் : ஹரிகாம்போதி தாளம்: ரூபகம்

பல்லவி

ரமணேசா நின்னையல்லால் பிற தெய்வம்
அறிந்திலேனே
ராப்பகல் நின்னைப் போற்றித் துதிக்கும் என்னை
ரக்ஷித்தருள்வாய்
(ரமணேசா)

அனுபல்லவி

சாமகானப்பிரிய ரமணேசா, சரணாகத வத்ஸலா
தாமதியாதென் தாபம் தணிய, தாமஸம் தீர்த்து
தடுத்தாண்டருளாய்
(ரமணேசா)

சரணம்

ஹரியும் அயனும் அடிமுடி தேடி அயர்ந்திட்ட
அங்கி வடிவானவனே
ஹரிகாம்போதியில் உந்தன் திருப்புகழ் பாடி
இறைஞ்சுகிறேன்
பரிபூர்ண, பதிதபாவன, பரமபவித்ர பரமேசா
பரிகசிக்காது பரிந்து இப்பேதைக்கு
பரமாத்மானுபவம் நல்காய்
(ரமணேசா)

12. CALL HIM – HE WILL COME

Call "Ramana", and he will come running,
The God Supreme to whom all immortals bow
Beg, "Ramana, protect me", and he will offer refuge
His bountiful grace will keep even Yama away.

He, of boundless light
　　the lord of the cosmos
He, who day and night
　　rejoices in the Self
The destroyer of *karma*,
the embodiment of silent teaching.

Be though stone-hearted
call him with true *bhakti*

And he will come running!



12. அழைத்தால் வருவான்

ராகம் : வலஜி தாளம்: ஆதி

பல்லவி

ரமணா என்றழைத்தால் விரைந்தே ஓடிவருவான்
அமராதி தேவரும் வணங்கும் மாதேவன்
(ரமணா)

அனுபல்லவி

''ரமணா கா'' என்றால் அபயம் அளிப்பான்
யமனும் அணுகாது அருள் பாலிப்பான்
(ரமணா)

சரணம்

எல்லையிலா ஒண்மை ஒளி அம்பலத்தானை
அல்லும் பகலும் தன்னில் தானாய் ரமிப்பவனை
வல்வினை மாய்த்தருளும் மோன தேசிகனை
கல்நெஞ்சரேனும் மெய்யன்புடன் உள்ளுருகி
(ரமணா)



13. HE DAWNED ON EARTH

He dawned on earth like the Sun,
    blazing with the light of *jnana,*
and taught us the rare doctrine
    of knowing one's Self.

Through Ramana's compassionate love,
    surpassing that of our father and mother,
all attachments fall away on their own.

With Him eternally in our thoughts
our *karma* will be destroyed in full,
    like butter in fire,
redeeming us to live in our own true state
    steadfast in the Self,
ever immersed in unalloyed joy.



13. வந்தான் கதிரவனென

ராகம் : பெஹாக் தாளம்: ஆதி

பல்லவி

வந்தான் கதிரவனென ஞானவொளி வீசி புவியில்
தந்தான் தன்னைத்தான் அறிந்திடும் அரியதொரு
நெறிதனை
(வந்தான்)

அனுபல்லவி

தந்தை தாயினும் மிக்கத் தண்ணளிசேர் ரமணன்
அருளிருக்க
பந்ததொந்தம் அனைத்தும் அவிழ்ந்திடுமே
தன்னாலே
(வந்தான்)

சரணம்

எந்த நேரமும் அவனையே சிந்தனை செய்திடில்
வெந்தழலிடு வெண்ணெயென நம் வல்வினை
முற்றும் மாய்ந்திடுமே
சொந்த நிலை நின்று தன்னிலே தானாய் நிலைத்து
சந்ததம் சலிப்பற சந்தோஷமாய் வாழ்ந்து
உய்ந்திடவே
(வந்தான்)

14. A WONDROUS SIGHT

I saw a marvellous, most wondrous sight,
Immense *jnana*, vast as the ocean, colossal as the
mountain,
Walking the earth in human form, blazing light.

I saw, I saw the Absolute,
who is both with and without form,
Adorning the name Ramana
come to redeem the whole world
holding aloft the flag of Upanishad.

His hand confirms protection
to those who seek it at his feet
He is himself the holy water
that reclaims those who bathe in it
His glance of grace
destroys the ego and all dross.

He is the immutable Arunachala
showering grace on all who go round Him
— even today.



14. அதிசயம், அதிசயம்!

ராகம் : மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

அதிசயம், அதிசயம், அதிசயம் ஒன்று கண்டேன்!
அருட்பெருங்கடலான ஞானமலையொன்று
மானிடவுருவெடுத்து
அவனியில் ஒளிவீசி பவனி வரக்கண்டேன்
(அதிசயம்)

அனுபல்லவி

அருவுருவான பரம்பொருள் ரமண நாமம் பூண்டு
அகிலபுவனமுய்ய உபநிடத கொடி பிடித்துவரக்
கண்டேன், கண்டேன், கண்டேன்
(அதிசயம்)

சரணம்

அடிபணியுமன்பர்க்கு அபய ஹஸ்தம் காட்டி
அடியார் நீராடிக் கடைத்தேற தானே புனித
தீர்த்தமாய்
அருள் விழியாலே ஆணவ மலமாசுகளைத்
தீர்த்தோன்
அருணாசலமாய் இன்றும் தனை வலம்
வருவோர்க்கு அருட்பாலிக்கும்
(அதிசயம்)



15. FOOLISH MIND

Foolish mind, why do you still
get entangled in *maya*?
Don't you know that the one perfect absolute Self
is resplendent in every being as the
indestructible I?

Foolish mind, why are you still
ignorant and afraid?
Don't you know that the mouldering body
is only a filthy garment to be thrown away?

Foolish mind, drink to your fill
the ambrosial grace
showered by Sri Ramana of Arunachala,
the miracle drug that eradicates
this worthless life.

Foolish mind, be saved from the cycle of births!



15. மட நெஞ்சமே

விருத்தம்

1. அனைத்துயிருள்ளும் அஹமஹமென அயராது
அவிர்ந்தொளிரும் ஏகான்ம பரிபூர்ண மெய்ப்
பொருளே
அழிவற்ற ''நான்'' என்பதென, மட
நெஞ்சமே – நீ
அறிந்திருந்தும் மனமயங்கிடல் மடமையன்றோ?

2. அழியும் ஊனுடலே நானெனும் மயல் அறவே
ஒழிந்து
அழுக்குடையெனவே அவிழ்த்தெறிதலே மெய்
ஞானமென்று
அறிந்தபின்னும் அஞ்சி நடுங்குதலழகோ மட
நெஞ்சமே
அஞ்ஞானத்தினின்றும் நீ அறுபடாயோ - பகராய்

3. அவனிதனிலே இவ் அவவாழ்வினை
அழித்திடவே
அருமருந்தொன்றுண்டு; அதுவே ஞான
குருபர ரமணன்
அருணயம்பதியில் பொழியும் அருளமுதமாம் –
அதனை
அருந்திடுவாயள்ளியள்ளி, மட நெஞ்சமே,
பவபயமொழிந்திடவே



16. YOU ARE EVERYWHERE



Wherever I look,
whatever I see,
everywhere is your gentle smiling face,
Ramana!



Like the rain-bearing cloud
your eyes poured grace
and attracted me
as the iron filings to the magnet.
From that day on, you are the one
who has taken over my thoughts.

The moon that wanders the blue skies,
and the celestial stars,
are but your comely face, Ramana!

The roar of the sea,
the reverberating thunder
and the raging storm,
ring in my ears, Ramana,
as I, I.

The peacocks that dance with outspread plumes
the many kinds of fishes that swim in the water
the frisky squirrels that nibble fruit
are all but your form, Ramana!



10/4/24

16. எங்கும் நிறைந்தோன்

ராகம் : நாட்டைக்குறிஞ்சி தாளம் : ஆதி

பல்லவி

பார்க்குமிடம் பொருளனைத்திலும் ரமணா – உந்தன்
புன்முறுவல் பூக்கும் முகம் தோன்றுதய்யா
(பார்க்கும்)

அனுபல்லவி

கார்முகில் போலும் கருணை பொழியும்
கண்ணாளா

(மத்யம காலம்)

காந்தம் இரும்புபோல் என்னைக் கவர்ந்த அன்று
முதல்
இன்றுவரை எந்தன் கருத்து முற்றும்
குடிகொண்டவா
(பார்க்குமிடம்)

சரணம்

நீல வானில் உலா வரும் நிலாவும், விண்மீனும்
நின் மோன முகமானதே – ரமணா (2)
அலைகடல் ஓசையும், அதிரிடியும், வீசும்
புயலும் - ரமணா
அஹமஹமென எந்தன் செவியில் ஒலிக்குதே (2)

The black *koel* and the green parrot
call but your name, Ramana!
The cows that give milk
and the monkeys that built the bridge
are but your image, Ramana!

Are you not the movement
and the stillness of the universe
and all that lies beyond?

Having sought refuge in you, Ramana,
can I ever be caught in the cycle of births?



விரித்தாடும் தோகை மயிலும், நீரில் நீந்தும்
மீனினமும் - கனி
கொறிக்கும் கோல அணிலும் உந்தன் உருவாகுமே
- ரமணா
கரியநிறக்குயிலும், பசுங்கிளியும், ''ரமணா, ரமணா''
எனக்கூவுதே - பால்
சொரியும் பசுவும், பாலமைத்த வானரமும் நின்
வடிவானதே - ரமணா

(மத்யம காலம்)

அண்டபிண்ட சராசரமெலாம் நீயல்லவோ -
உந்தனை
அண்டிய என்னை மறுபிறவி பற்றுமோ?
(பார்க்குமிடம்)



17. THE HOLY SHRINE OF RAMANA

The holy shrine of Sri Ramana
        is most enchanting to the eye.
All worries evaporate
        and joy bursts forth
                the more often you behold it.

Bees hum among the flowers,
peacocks dance, *koels* sing,
poets recite their mellifluous verses,
green parrots frolic
and birds flutter about.

On the slopes of the Annamalai —
where Siva appeared as a column of fire
to the wonderment of celestials and humans alike —
monkeys roam merrily, squirrels nibble fruit,
cows rejoice with their young
and ascetics sit in silent meditation.



ஸ்ரீ ரமண சந்நிதி

17. ஸ்ரீரமண சந்நிதி

ராகம் : வாசஸ்பதி　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

கண்கவரும் காக்ஷியாம் ஸ்ரீ ரமணனின் சந்நிதி
காணக்காண கவலை கரைந்து இன்பம் பொங்குமே
(கண்கவரும்)

அனுபல்லவி

வண்டார் பூஞ்சோலைதனில் மயிலாட, குயில் கூவ
பண்ணிசைக்கப் புலவோர், பைங்கிளிகள் கொஞ்ச,
பறந்திடும் புள்ளினமும்
(கண்கவரும்)

சரணம்

1. விண்ணோரும், மண்ணோரும் வியந்திட அரன்
வெந்தழுலுருவெடுத்த - திரு
அண்ணாமலைச் சாரலில் ஆனந்தமாய்
வானரங்கள் சஞ்சரிக்க
அணில்கள் கனி கொறிக்க, ஆவினங்கள் தம்
கன்றுடன் களிக்க
கண்மூடி அடியார் மௌனத்தாழ்ந்தமர்ந்திருக்கும்
காக்ஷி
(கண்கவரும்)

Fishes leap and play in the streams,
butterflies make bright and colourful patterns
amidst the grass and weeds,
the southerly breeze wafts gently
and the mind, free from thought, is at peace,
merging with the divine beauty.

Here, clad in a piece of cloth,
with staff and *kamandalam* in hand,
He who has transcended the *Upanishads,*
Dakshinamurthy of yore, the teacher of *jnana,*
strode this earth majestically,
Now, reigning as Ramana Mahalinga,
showers his grace on us for ever.



2. தண்ணீர் மடுவினில் மீனினங்கள் துள்ளி
விளையாட
பூண்டும், புல்லும் போர்த்த பூமியில்
பட்டாம்பூச்சிகள் பளிச்சென
வண்ணஜாலங்கள் படைக்க; வீசும் இளம்
தென்றலில்
எண்ணங்களற்று தெய்வீக எழிலில் இழைந்து
மனம் அமைதியுறல்
(கண்கவரும்)

3. துண்டும், கோவணமும் தரித்து, தரணியில் உலா
வந்தவன்
தண்டமும், கமண்டலமும் கைக்கொண்ட உபநிட
பாரங்கதன்
பண்டு தக்ஷிணாமூர்த்தியென துலங்கிய
ஞானோபதேசிகன்
ஈண்டு ரமணேச மஹாலிங்கமென என்றும் நமை
ஆண்டருளும் காக்ஷி
(கண்கவரும்)

18. TO A CHILD

Little one, look at the flowers in the garden,
The bee sings round and round the blooms,
the butterfly weaves colourful patterns in its
dizzying path,
as delight and rapture engulf your heart.

Little one, don't pluck the flowers and the leaves!
Don't you feel the pain when pinched?
Little one, trees, plants, creepers too, feel the twinge.
Don't cause distress to anything,
so said Bhagavan Ramana.

Little one, leaves and flowers and fruit
are not ours to own.
"Scattered flowers and leaves
will do for the puja, *paatti,*
Let us preserve the lovely garden
as adoration to mother Nature,"
So must you tell your grandmother.



18. பாப்பா பாட்டு

ராகம் : மாண்டு தாளம் : ஏகம்

1. பாப்பா, பாப்பா, பூங்காவில் பூக்களைப் பாரேன்
பார்க்க, பார்க்க மனதில் மிக்க மகிழ்ச்சி பொங்குதே
பாட்டு பாடுதே வண்டு, வட்டமிட்டுப் பூக்களை
பட்டாம்பூச்சி சுற்றிச் சுற்றி வண்ண கோலம்
தீட்டுதே

2. பாப்பா, பாப்பா, பூவைப் பறிக்காதே, இலையைக்
கிள்ளாதே
பாப்பா, பாப்பா, உன்னைக் கிள்ளினால்
வலிக்குதல்லவா?
பாப்பா, மரம், செடி, கொடிக்கும் கிள்ளினால்
வலிக்குமே
பாப்பா, எதையும் நோகச் செய்யாதே என்றார்
ரமண பகவான்

3. பாப்பா, இலையும், பூவும், காயும் நமக்கு
சொந்தமாகுமோ?
பாட்டியிடம் கூறிடு, உதிர்ந்த பூவும், இலையுமே
பரமேச பூஜைக்கும் போதுமானதே என்று,
பார்ப்போர் கண்கவர் சோலை இயற்கையன்னை
பூஜையாம்.



19. I CAME RUNNING



I came running
hearing your renown,
won't you whisper
an *upadesa mantra*
in my ear?

Ramaniah, Aruniah,
shower your grace on me!

Won't you drive out
with your holy stick
the devil ego that pesters me
relentlessly, without end?

Having searched in vain everywhere
for the precious panacea
I have come to you,
dejected, dispirited.

Root out my wicked ego totally,
I beseech you, *Omkara Rupa!*
Your sacred feet are my only refuge.

Don't cast me aside
Your nectar of grace alone
will redeem me.

19. ஓடோடியும் வந்தேன்

ராகம் : பைரவி | தாளம் : ஆதி

பல்லவி

ஓடோடியும் வந்தேனய்யா உந்தன் திருப்புகழ் கேட்டு
ஓதிடாயோ ஒருபதேச மந்திரம்தனை எந்தன் செவியிலே
ரமணய்யா, அருணய்யா, அருள்புரிந்தே
(ஓடோடியும்)

அனுபல்லவி

ஓயாது ஒழியாது உழற்றிடும் எந்தன் மனப்பேய் தனை
ஓட்டிடாயோ உந்தன் திருக்கரக் கோலோச்சியே
(ஓடோடியும்)

சரணம்

ஓரிடத்தும் கிட்டா அரு மருந்ததனைத் தேடி
அலுத்தே வந்தேன்
ஒழித்திடல் வேண்டுமய்யா அடியோடெந்தன்
பொல்லா அகந்தைதனை
ஓங்கார ரூபா, உந்தன் திருவடியே கதியென
நம்பும் என்னை
ஒதுக்குறப் பாரேல்; உந்தன் அருளமுதொன்றே
எனை உய்விக்கும்
(ஓடோடியும்)

20. MIND, O MIND!

Mind, O Mind!
You cannot live with me any more.
Enough, enough, enough,
I have had enough trouble
with you day in and out.

You have no more place here,
your silly games cannot go on
Get away this instant,
don't fall prey needlessly to my sword.

I will vanquish you
with the sharp weapon
"Who am I?"
given me by my guru
Ramana of Aruna.

Your tricks will not be of any use,
I will annihilate all arising thoughts.
Begone fast by the path you came,
your perverse mulishness is futile now.



20. மனமே, மனமே

ராகம் : யமுனா கல்யாணி — தாளம் : சாபு
ஸ்ருதி : மத்யமம்

பல்லவி

மனமே, மனமே, இனிமேலும் நீ என்னுடன் வாழ
நினையாதே
தினமும், தினமும் உன்னுடன் நான் படும்பாடு
போதும், போதும், போதுமே
(மனமே)

அனுபல்லவி

உனக்கிங்கினி இடமில்லை கண்டாய், உன் களியாட்டம்
நடவாது
மனமே ஓடிடு இக்கணமே; வீணே என்
வாளுக்கிறையாகாது
(மனமே)

சரணம்

எந்தன் குருநாதன், அருணை ரமணன் கருணையுடனே
எனக்கருளி
தந்த ''நான் யார்'' எனும் கூர் அஸ்திரம் கொண்டே
உன்னை மாய்த்திடுவேனே
உந்தன் மாயம் ஒன்றும் பலிக்காது; உந்தும்
எண்ணங்கள் அனைத்தையும் அழித்திடுவேன்
வந்த வழியே நீ சென்றிடு விரைந்தே; வீண் பிடிவாதம்
இனிப்பயனிலையே
(மனமே)

21. CAN THIS LIFE BE WASTED?

My life, this life,
this precious human life,
can it be wasted,
Ramana?

Is not the object of life
to be absorbed in you?
Should the desires of this wretched world
worry me,
who has been touched
by your glance?

The way you lived, Ramana,
taught us that life's goal
is staying steady in the Self.

Is it fair to let me,
your slave,
stray away from your path
into wrong directions?

Born in Tiruchuzhi,
you have escaped the *chuzhi* of life.
How can you then
let me be tangled in the dizzy cycle?

Before my life gets spent,
like water irrigated to weeds,
save me now, this minute.
Don't waste any time.

21. வாழ்வு விரயமாகலாமோ?

ராகம் : ஆஹிரி தாளம் : ரூபகம்

பல்லவி

வாழ்வு, இந்த வாழ்வு, கிடைத்தற்கரிய இம்மானிட
வாழ்வு விரயமாகலாமோ, ரமணா புகலாய்
(வாழ்வு)

அனுபல்லவி

வாழ்வின் இலக்கே உனையடைந்தடங்குதலன்றோ?
பாழுலகாசை எனைப்பற்றலாமோ, உன் விழி பட்டதாலே
(வாழ்வு)

சரணங்கள்

1. வாழ்வின் பயன் தன் சொரூபத்தில்
நிலைத்திருத்தலேயென
வாழ்ந்தே வழிகாட்டிய ரமணா, உந்தன் அடிமை உன்
வழி செல்லாது, பொய்வழியில் புக்குழன்று – மெய்
வழி தவறி வீணே தடுமாற விட்டிடல் அழகோ?
(வாழ்வு)

2. சுழியில் பிறந்து, சுழியினின்று விடுபட்டவா,
எனைப் பிறவிச்
சுழலில் சிக்கி சுழலவிடுதல் சரியோ, சொல்லாய்
விழலுக்கிறைத்த நீரென இவ்வாழ்வு வீணாகுமுன்,
இனியும்
பொழுது போக்காது, இப்பொழுதே சமயம் எனை
ஆண்டருள்வாய்
(வாழ்வு)

22. "I AM THE LIGHT"

I lost my moorings
searching for you in the woods.
You soothed me with the sweet words,
"I am the Light that shines in you."

Immature and unfit I was,
yet you accepted me
as of some worth.
You taught me that Self-knowledge
is simple indeed.

Your life showed *jnana-vichara*–
without renouncing home and hearth
for a life in the forest –
to be the hassle-free and proper path.

May I, forever joyfully,
be immersed in your grace.



22. உன்னுள் சுடரும் ஒளியே நான்

ராகம் : சிந்துபைரவி தாளம் : ஆதி

பல்லவி

திக்குத்தெரியாத காட்டில் உனைத்தேடி அலைந்த
எந்தனிடம்
தித்திக்கும் தேன்மொழியாலே, ''உன்னுள் சுடரும்
ஒளியே நான்'' என்றனையே – (ரமணா)
(திக்கு)

அனுபல்லவி

பக்குவமிலா எனையும் ஓர் பொருட்டாய்க்
கொண்டாண்டனையே
மிக்க எளிதாம் ஆன்மவித்தை என்று புகட்டினையே
(திக்கு)

சரணம்

மக்கள், மனை, சுற்றம் துறந்து கானகம் ஏகாமலே
அனைவர்க்கும்
தக்க மார்க்கம் ஞான விசாரமேயென புகன்றனையே
சிக்கலொன்றிலாததாம் இந்நெறியென வாழ்ந்து
காட்டினையே
எக்காலும் உந்தன் இன்னருள் நினைந்து நினைந்து
இன்புறுவேனய்யா
(திக்கு)

23. BESTOW YOUR GRACE

Ramana, will you not through your grace,
help me know myself?

My mind only analyses others,
and never my own self.

When is the day coming
when I am going to be at peace
having understood myself?

O supreme Ramana, beyond compare,
the *Paramatma* who delights in his own Self
shower your grace on me
who suffers from the delusion
that my body alone is I,
make me realise myself
and rejoice in the *atman*.

23. தாராயோ உந்தன் அருள்தனை?

ராகம் : விஜயநாகரி தாளம் : ஆதி

பல்லவி

தன்னை அறிந்திடவே தாராயோ உந்தன் அருள்தனை?
(ரமணா)
(தன்னை)

அனுபல்லவி

தன்னையன்றிப் பிறரை ஆராயவே மனம் தூண்டுதே
தன்னையே ஆராய்ந்தறிந்தடங்கல் எந்நாளோ? –
(ரமணா)
(தன்னை)

சரணம்

தன்னையே ஒப்பாரில்லாத் தனிபர ரமணா
தன்னிலே தானாய் ரமித்திடும் பரமாத்மனே
தனுவையே தானென நினைந்து தவித்திடும் தமியன்
தன்மயமாகி ஆத்மானந்தத்தில் திளைத்திடவே
(தன்னை)



24. LIGHT THE LAMPS

Light the lamps in our hearts,
    Ramana!
Remove the sins of anger and anguish,
    dispel the darkness within.

On the auspicious *deepam* day
let the light that diffuses through the earth
glow as the lamps of *jnana* within all *jivatmas.*

Annihilate the dull ego,
part of the *jiva*
    that is both aware and not,
Make the *advaita atman* shine forth
O guru Ramana – *Sat, Chit, Shakti, Siva!*

Let the rays of Sivananda
be ever kindled in the hearts of *bhaktas.*



24. தீபங்கள் ஏற்றிடுவாய்

ராகம் : காப்பி தாளம் : ஆதி

பல்லவி

தீபங்கள் ஏற்றிடுவாய் எங்கள் அகத்தினிலே – ரமணா
கோபதாப பாபங்கள் போக்கி, அகயிருள் அகற்றிடுவாய்
(தீபங்கள்)

அனுபல்லவி

தீபோத்ஸவ நன்நாளில் பாரில் பரவிடும் தீபவொளி
ஜீவாத்மாக்கள் தோறும் ஞான ஜோதியென சுடர்விட
(தீபங்கள்)

சரணம்

சித்ஜடமாம் ஜீவன் தன் ஜடபோத அகமது
செத்தகல; அத்துவிதமாம் மெய்யகம் துலங்க
சத்சித்சக்தி சிவசொரூப குரு ரமணா – பக்தர் தம்
சித்தத்தே ஸதா சிவானந்த ஜோதி ஜொலித்திடவே
(தீபங்கள்)



25. GIVE ME PEACE

Will you not give me peace,
Ramana?
Seated in my heart,
will you not give me bliss?

Are you not aware
that day and night
I am tormented by my troublesome ego?

You, who are beyond the understanding
of even the immortal ones
You, who have incarnated as Ramana
You, the lord of Uma,
treading this earth to redeem us common folk.

Will you not destroy the false illusions
my life is enmeshed in?
Will you not drive away the demon ignorance
and bestow true knowledge?

I am enfeebled by an unstable heart
and cursed mind,
Your lotus feet is the only refuge
of this slave who worships you.

Will you not give me peace, Ramana?



25. அமைதி தாராயோ?

ராகம் : அமீர்கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

அமைதி தாராயோ ரமணா – எந்தன்
அகத்தமர்ந்து ஆனந்தானுபவம் அருளாயோ?
அல்லல் மிகு அகந்தை அல்லும் பகலும் எனை ஆட்டி
அலைக்கழித்திடுதே; அது நீ அறிந்திடாயோ? – பேர்
(அமைதி)

அனுபல்லவி

அமரரும் அறிதற்கு அரிதான ரமணாவதாரா
பாமரருமுய்ய உலகிலுலவிய உமாமஹேசா
(அமைதி)

சரணம்

வஞ்ச பொய் வாழ்விலுழலும் எந்தன் மாமயல்
மாய்த்திடாயோ?
அஞ்ஞானப் பேய்தனையோட்டி, மெய்ஞ்ஞானம்
புகட்டாயோ?
நஞ்சுளத்தால் நெஞ்சம் நிலைகுலைந்து நைந்து
நலிகின்றேனே
தஞ்சம் நின் தாமரைத்தாளே என தினம் தொழும்
இவ்வடிமை(க்கு)
(அமைதி)

26. THE VORTEX



Freed from the world's dizzy rounds,
rid of *maya*,
let me lie still
at your lotus feet
like a drunken honeybee.

Like the bird in the sky
chirping and flying without a care
let me cast aside earthly desires
and sing hosannas to you in *Hussaini.*

Tossed around by my demonic ego
my sole succour is your ever beautiful feet.
May your gracious sight
that slays without slaying
fall on me.

Redeem me, O Lord,
as I constantly sing your sweet name.



26. உலகச் சுழலில்

ராகம் : ஹுஸேனி தாளம் : ஆதி

பல்லவி

உலகச்சுழலில் சிக்கி உழலாது, வெம்மாயை விலகி –
ரமணா
உந்தன் கமலக்கழலில் மதுவுண்ட வண்டென கிடந்திட
அருளாய்
(உலக)

அனுபல்லவி

உல்லாசமாய் விண்ணில் கூவி உலவிவரும் புள்ளினம்
போலே
உலகாசை உதறி, உன் புகழே ஹுஸேனியில் இசைக்க
வேணுமய்யா
(உலக)

சரணம்

பொல்லா அகப்பேய் என்னை ஆட்டியலைக்கழிக்க,
இவ்வுலகிலுந்தன்
தொல்லெழிற் கழலொன்றே உறுதுணையென
உணர்ந்தேனய்யா
கொல்லாமலே கொல்லும் உந்தன் கருணை விழி
என்மேல் வீச
சொல்லச் சொல்ல இனிக்கும் உந்தன் நாமமே பாடி
உய்யவேண்டுமய்யா
(உலக)

27. TODAY ! NOW !



Today is the day,
the auspicious day
to do good deeds,
don't wait for tomorrow.
So you said, Ramana.

Can there be yesterday
or tomorrow
if there is no today?

The day that has gone
and the day to come
rest on today alone.

Ramana, you said
there is only one moment
and that is Now.

Now, this moment, this day,
I seek your grace
to know who I am.



27. இன்றே, இப்பொழுதே

ராகம் : தோடி　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

இன்றே நந்நாள், நாளை, நாளையெனத் தள்ளலாகாது
நன்றே செய்தற்கு, என்றறிவித்தனையே – ரமணா
(இன்றே)

அனுபல்லவி

இன்றே இல்லையெனில் நேற்று, நாளை
என்பதுண்டோ?
சென்ற நாளும், வரும் நாளும், இன்றையேத்
தழுவியதன்றோ?
(இன்றே)

சரணம்

ஒன்றே உண்டு காலம்; அதுவே இப்பொழுதெனும்
நிகழ்காலம்
என்றெலாம் தெளிவுற உரைத்தனையே – ரமணா
இன்றே, காலம் தாழ்த்தாது, ''நான் யார்''
என்றாராய்ந்துணர
உன்றன் அருளொன்றே வேண்டுவனே – ரமணா
(இன்றே)



28. THINK OF RAMANA

Every moment,
with a heart that melts,
think of Ramana,
Our Lord

The light of knowledge
will shine within us,
on its own,
dispelling the dense
darkness of ignorance.

Ask "Who am I?"
and it will destroy
"I" and "YOU" and "HE" too.

The one true state
will blaze forth,
and we shall forever
rejoice in the *atman.*



28. ரமணனை நினை நெஞ்சமே

ராகம் : செஞ்சுருட்டி
ஸ்ருதி : மத்யமம்

தாளம் : ஆதி

பல்லவி

இமைப்பொழுதும் வழுவாது மனமுருகி
நமையாண்ட ரமணனை நினை நெஞ்சமே
(இமைப்பொழுதும்)

அனுபல்லவி

நம்முள் ஞானவொளி பாயுமே தன்னாலே
மையிருளாம் அஞ்ஞானம் மாய்ந்திடுமே
(இமைப்பொழுதும்)

சரணம்

தன்மை அழிந்திடுமே ஞான விசாரத்தாலே
முன்னிலைப் படர்க்கையும் உடன் ஒழிந்திடுமே
ஒன்றாய் ஒளிரும் உண்மை நிலை உணர்வோமே
என்றென்றும் ஆத்மானந்தத்தாழ்ந்திடுவோமே
(இமைப்பொழுதும்)



29. SURRENDER

Surrender to Ramana
Everything is possible then.

The lame man will walk
the lowest of the low will be redeemed.

Everything is for the good
all is but his grace
Whatever happens,
does it ever matter?

Let us leave it all to him
and cling to his feet.



29. சரணாகதி

ராகம் : பெஹாக் தாளம் : ஆதி

பல்லவி

நடவாததும் உண்டோ, ஸ்ரீ ரமணனை சரணடைந்தால்
(நடவாததும்)

அனுபல்லவி

நடந்திடுவனே முடவனும், கடைத்தேறிடுவனே
கடையனும்
(நடவாததும்)

சரணம்

நடப்பன யாவும் நன்மைக்கே, எல்லாம்
அவனருளே – எது
நடப்பினும் நமக்கென்(னென), அவன் கழலே
கதியென கிடந்திடில்
(நடவாததும்)



30. BRIGHT LAMP

Wave upon wave, my thoughts
break against my mind-rock,
Within me swing ceaselessly,
the despicable desires of the world.

Tell me, Ramana, is it proper
that this slave, weak and frail,
should flounder, trapped in evil fate,
as does the fish caught in the net?

O ever joyous Sat Guru,
standing untroubled as a mountain,
Won't you make my roving mind
stay steadfast in the *atman*?
Won't you be the bright lamp
that destroys in an instant age-old dense darkness,
and dispel my ignorance?



30. நல் விளக்கு

ராகம் : ஹிந்தோளம் தாளம் : ஆதி

பல்லவி

அலை அலையாய் எண்ணங்கள் மனத்திடை மோதுதே
உலகாசைப் பேய் ஓயாது என்னுள் ஊசலாடுதே
(அலை)

அனுபல்லவி

வலையிடை படு மீனென, அபலை உந்தன் அடிமை
வல்வினையிற் சிக்கித் தவித்தல் முறையோ, கூறாய்
(ரமணா)
(அலை)

சரணம்

சலித்தலிலா கிரியுருவாயொளிர் சதானந்த ஸத்குருவே
சலிக்குமென் சித்தம் ஆன்மாவில் நிலைக்க
அருளாயோ?
பல்கால் நள்ளிருளைக் கணத்தில் அறவே அழித்திடும்
நல் விளக்கென எந்தன் அஞ்ஞானத்தை அகற்றிடாயோ?
(அலை)



31. THE DEMON EGO

In the darkest deep of a dense forest,
a black monkey can be captured.
But in the deepest dark of my being,
the demon ego remains untamed.

Without your grace,
I cannot question what it is,
I cannot drive out the formless 'I'
that clings to the inert body.

When the ego arises, all else arises
When the ego is not, all else is not.
This great truth you taught us, Ramana!

Shower your grace on me,
dispel the illusion of this world,
rid me of my base self.



31. அகப்பேய்

ராகம் : தர்பாரி கானடா   தாளம் : ஆதி

பல்லவி

அடர் கானகத்துக் காரிருளில் கருங்குரங்கையும்
கட்டலாம்
அகயிருளில் அகப்பேயகந்தை ஆட்டம் அடக்க
அறியேனே
(அடர்)

அனுபல்லவி

ஜடவுடல் பற்றிய உருவற்ற அகந்தையை ஓட்டிட
நாடுதற்கும் ''யாதிதென'', உன்றன் அருளின்றி ஆகாதே
(அடர்)

சரணம்

அகந்தை யொன்றுண்டாயின் அனைத்துமே உண்டாகும்
அகந்தையின்றேல் இன்றனைத்தும் எனும் பேருண்மை
பகர்ந்தனையே ரமணா! எந்தன் அகப்பேயொழிந்து
ஜகமாயை விலக, உந்தன் அருள் மழை பொழியாயோ?
(அடர்)



32. SIVA GURU RAMANA

"Sambo, Sankara,
Siva Guru Ramana!"
Make this your constant meditation,
Mind of mine,
to escape the current of births.

Ever remembering
the son of Sundaresa and Azhagu,
the dweller on Sonagiri,
You will remain pure,
Mind of mine.

Meditate on the Lord of Chidambaram,
dancing rhythmically with Shakti beside Him,
The immovable Arunachala Siva
who gave Shakti Her equal due,
Sat Chit Ananda, silent Ramana,
embodiment of absolute intelligence.

Mind of mine, you will be immersed
in the ocean of true bliss.

32. சிவகுரு ரமணா

ராகம் : சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

சம்போ சங்கர சிவகுரு ரமணனை
சதா சிந்தனை செய் மனமே, ஜன்மம் கடைத்தேறவே
(சம்போ)

அனுபல்லவி

சுந்தரேசர் அழகு மைந்தனை, சோனகிரி வாஸனை
சந்ததம் ஸ்மரித்திட சித்த சுத்தி ஸித்திக்குமே
(சம்போ)

சரணம்

சக்தி ஸஹித 'தகதிமி' என நடனமிடும் சிற்றம் -
பலத்தனை
சக்திக்குச் சமபாகமீந்த அசல சிவ அருணேசனை
சச்சிதானந்த மோன ரமணனை, சிற்பரஸ்வரூபனை
சத்ய சுகானுபவ ஸாகரத்தில் நாம் சுகிர்த்திடவே
(சதா சிந்தனை)



33. JOYOUS OCEAN OF RAMANA

Ye people of the world, come,
bathe in the ocean of Ramana joyous,
where the pure nectar of his grace
flows without pause.

Come, cast out the deceitful, fraudulent
world of illusion,
Gently, gently, plunge into the
awareness of the Self.

Seeking his grace with a clear mind,
let us cross the inevitable sea of births.
Clinging to the Feet of the indefinable
sky-high Ramana,
Let us merge with the one Reality
that exists beyond thought.



33. ரமணானந்த கடல்

ராகம் : பீம்ப்ளாஸ் தாளம் : ஆதி

பல்லவி

அள்ள அள்ள அருள் சுரக்கும் ரமணானந்தமாம்
தெள்ளமுதக் கடலினில் நீராட வாரீர் ஜகத்தீரே
(அள்ள)

அனுபல்லவி

கள்ளம் கபடமிகு உலக மாயையைக் களைந்து
மெள்ள, மெள்ள உள்ளே அமிழ்ந்து ஆன்மானுபவத்தில்
மூழ்கிடவே
(அள்ள)

சரணம்

தெள்ளத் தெளிந்த உள்ளத்தால் அவனருளே நாடி
மீளற்கரிய பிறவிக்கடல் கடந்திடுவோம் நாம்
விள்ளற்கரிய வான்புகழ் ரமணேசன் தாள் பற்றி
உள்ளத்தே உளதாம் உள்ள பொருளுடன் ஒன்றிடவே
(அள்ள)



34. GRANT ME A BOON

I am sick and tired of my numberless births,
Ramana!
When am I going to obtain your grace?
For ages I have been imploring your pity,
To continue to rebuff me is unjust on your part.

Ramana!
Grant me a boon.
Let me not be born in a mother's womb.
Let me escape the suffering of endless births.
Grant me the eternal life
that has no births and no deaths.



34. தரவேண்டும் வரமொன்று

ராகம் : முகாரி　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

என்றைக்கு உன்றன் கிருபை வருமோ – ரமணா
எண்ணற்ற பிறவிகள் எடுத்தலுத்திட்ட எந்தனுக்கு
(என்றைக்கு)

அனுபல்லவி

பன்னெடு நாளாய் உன்றன் அருள்வேண்டி
இறைஞ்சிடும்
என்னை இனியும் உதாசீனம் செய்தல் உசிதமல்லவே
(என்றைக்கு)

சரணம்

தர வேண்டும் வரமொன்று ரமணா – இனி
ஒரு தாயுதரத்தும் நான் பிறவாதிருக்க,
பிறந்து, பிறந்திளைத்து மீளாத் துயரில் வீழாது
பிறப்பு இறப்பில்லா பெருவாழ்வு வாழ்ந்திட
அருள்வாயே.
(என்றைக்கு)



35. TO A PARROT

Handsome Ramana's wondrous deeds
a thousand times described, too,
O parrot,
we will listen joyfully.

At sixteen, he experienced and conquered death,
without his mind straying,
O parrot,
he was immersed in deep meditation.

Forsaking his home, his family, his friends all,
the son sought the Father,
O parrot,
and departed from Madurai.

Penniless, with aching limbs he trekked,
with his heart overflowing,
O parrot,
and reached Aruna in the morning.

With great enthusiasm, he ran to the temple,
he saw his Father Arunachala,
O parrot,
and was engulfed in rapture.

Blissfull in his state of Self, to redeem his devotees
embodied with compassion was he,
O parrot,
strolling around in Tiruvannamalai.

35. கேளடி கிளியே!

கிளிக்கண்ணி மெட்டு தாளம் : ஆதி

1) அழகன் ரமணனின் அற்புத லீலைகளை
ஆயிரமுறை உரைத்தாலுமே – கிளியே
ஆனந்தமாய் கேட்போமடீ.

2) பதினாறு வயதினில் மரணத்தை ஆய்ந்தறிந்தான்
எதிலும் மனம் நாடாமலே – கிளியே
ஆன்ம நிஷ்டையில் ஆழ்ந்தானடீ.

3) மனை வாசல், உற்றார், சுற்றம் அனைத்தும் துறந்தான்
மகன் தந்தையைத் தேடியே – கிளியே
மதுரை விட்டேகினானடீ.

4) கையில் காசிலாது, கால் கடுக்க நடந்து களைத்து
காதலாகி கசிந்துருகியே – கிளியே
காலை அருணை அடைந்தானடீ.

5) பரபரத்து ஓடோடியும் போய்ச் சேர்ந்தான் கோயிலுள்ளே
பார்த்தான் அப்பன் அருணாசலனை – கிளியே
பரவசமடைந்தானடீ.

6) தன்னிலே தானாய் ரமித்தவன், தொண்டர்க்கருள் பாலிக்கவே
திருவுடல் தனைத் தாங்கியே – கிளியே
திருவருணையில் உலவினானடீ.

Squirrels, deer, monkeys, cows and peacocks
surrounded him, the *ahimsa murthy,*
O parrot.
He was the loving deity of all.

Bestowing *moksha* on his mother Azhagammal
he erected a *lingam* on her *samadhi*,
O parrot,
and that is the temple of Matrubhuteswara.

Discovering "who I am" is the
only path of knowledge,
O parrot.
This is the Truth he spoke.

Through his *Arunachala Panchakam*, *Undhiyar*
and *Ulladu Narpadu,*
he taught us Self-knowledge,
O parrot,
and merged as light into the Annamalai hill.

Ramana, the all pervading, the golden-hued form of
Light,
O parrot,
filling our lives with his benediction.



7) அணில், மான், வானரமும், ஆவினம் மயிலும்
சூழ்ந்திருந்த
அஹிம்ஸாமூர்த்தியவன் – கிளியே
அனைவர்க்கும் அன்பு தெய்வமடீ.

8) அன்னை அழகம்மைக்கு, கைவல்யமீந்து சமாதி
வைத்து
அங்கு லிங்கம் அமைத்தனனே – கிளியே
அதுதான் மாத்ருபூதேச்வரரடீ.

9) நான் யாரென ஆராய்ந்து, தன்னை அறிதலொன்றே
ஞான விசாரமாம் – கிளியே
எனுமுண்மையை மொழிந்தானடீ.

10) அருணாசல பஞ்சகம், திருவுந்தியார், உள்ளது
நாற்பதும்
அருளி புகட்டினன் ஆன்மவித்தை – கிளியே
அருணையில் ஜோதியாய் கலந்தானடீ.

11) எங்கும் நிறைந்த ரமணனை, பொன் வண்ண ஜோதி
ரூபனை
பொங்கும் இன்புடன் நாம் பாடியே – கிளியே
மங்களமாய் வாழ்வோமடீ.



36. REMEMBER HIM ALWAYS

'Tis the ocean of bliss,
the thought of Sri Ramana at all times.

Sri Ramana whose teaching, 'Who am I',
is the weapon that conquers death.
Sri Ramana is the bright flame I, I
glowing in our hearts all day and night.

The king of kings,
delightful and pleasing
Majestic and handsome
of countenance.

The most sacred, supreme among men,
omnipotent, omnipresent,
lord of lords.

Sri Ramana, *jnani* of undimmed fame,
with shining golden body

May his benediction shine forth
for ever and ever!



36. ரமண ஸ்மரணம்

ராகம் : நவ்ரோஸ் தாளம் : ஆதி
சுருதி : மத்யமம்

பல்லவி

ரமண ஸ்மரணம் ஆனந்த ஸாகரமே – ஸ்ரீ

(ரமண)

சரணங்கள்

1) நமனை வென்றிட ''நான் யார்''
எனும் அஸ்திரம் தந்தருளிய

(ஸ்ரீ ரமண)

2) ''நான், நான்'' என ராப்பகல்
நம் இதயத்தொளிர் ஜோதிஸ்வரூப

(ஸ்ரீ ரமண)

3) ராஜ, ராஜ, ரமணீய மனோஹர
ராஜ கம்பீர சுந்தர வதன

(ஸ்ரீ ரமண)

4) பரம பவித்ர, பரமபுருஷ
பரமாத்ம, பராத்பர, பரமேஸ்வர

(ஸ்ரீ ரமண)

5) மின்னும் பொன்மேனி, மங்காபுகழ் ஞானி
என்றும் எங்கும் மங்களம் பொங்கிடவே

(ஸ்ரீ ரமண)

37. WE SALUTE YOU, RAMANA

We salute you, Ramana
we salute you with joyous hearts
we salute you a number of times
    an infinite number of times.

The son of Sundara
    the calm and righteous one
Knowledge incarnate
    to whom Indra and the *devas* pay obeisance.

The ever joyous
    who lives in the *atman* of all
The embodiment of Truth
The essence of all the Vedas
The teacher of Reality
The protector of all the worlds.

We salute you, Ramana
we salute you with joyous hearts
    a number of times, an infinite number of times.



37. வந்தனம் தந்தோம்

ராகம் : மிச்ரயமன் தாளம் : ஆதி

(''ராதாஸமேதா கிருஷ்ணா'' மெட்டு)

பல்லவி

வந்தனம் தந்தோம் உமக்கு – ரமணா
வந்தனம் தந்தோம் உமக்கு – மனமுவந்து
வந்தனம் தந்தோம் உமக்கு – கோடி, கோடி,
அனந்த கோடி
(வந்தனம்)

அனுபல்லவி

சுந்தரகுமாரா, சாந்தகுணசீலா
இந்தராதியரும் வணங்கும் ஞானசூர்யா
(வந்தனம்)

சரணம்

ஸதானந்தா, ஸர்வாத்ம வாஸா
ஸத்ய ஸ்வரூபா, ஸர்வவேதஸாரா
ஸத்தர்சனோபதேசா, ஸகலலோக பாலகா
(வந்தனம்)



REVIEWS OF THE AUTHOR'S FIRST BOOK "SRI RAMANA PAAMAALAI"

THE HINDU, Tuesday, May 21st, 1996

The dedication of a disciple or an admirer of one's mentor and guide may be in different ways. One of them, in the form of a garland of songs praising one's Guru, has been adopted by the composer in this book. In 71 songs set in different ragas, she extols the qualities and grace of her Guru. Smt. Mahalakshmi Suryanandan who was in the very presence of Sri Ramana Maharshi has received good training in classical music. Her devotional outpouring through these simple and lilting songs reveal her expertise in stringing the contents of each one of them in an excellent manner. The songs should be popularised with the help of professionals and also rendered in congregational worship.

★ ★ ★

ரமண ஒளி, டிஸம்பர், 1996

சீரிய காந்தியவாதியும், உயர்ந்த இரமண பக்தருமான தெய்வத்திரு K. சுவாமிநாதன் அவர்களின் மூத்த புதல்வி திருமதி சூர்யாநந்தன், யாரும் எளிதில் பக்தியுடன் பாடவல்ல 71 அற்புதமான பாடல்களை இராக, தாளத்துடன் இசைத்து பாமாலையாக சூட்டி, தனது படைப்பை நன்றிக் கடனாக தன் பெற்றோர்களுக்கு காணிக்கை செலுத்தியுள்ளார்கள். திரு. சுவாமிநாதன் அவர்களுடன் தனது இளமைக் காலம்தொட்டு இரமணாஸ்ரமம் அடிக்கடி சென்று வந்து

பகவானிடமும், அவரது அடியார்களிடமும் அவர் பெற்ற அனுபவங்களை, உபதேசங்களை பாடல்களாக பதிவு செய்த பெருமை மாஹி என்ற மகாலக்ஷ்மி போன்ற அன்பர்களால்தான் இத்துணை உண்மை செய்திகளை பாடல் வழியாக வெளிக்கொணர முடிந்தது. கவிஞன் எதையும் பாடலாம், எந்த நிகழ்வுகளையும் விளக்கிக் கூறலாம். ஆனால் மகாலக்ஷ்மி போன்ற உள்ளார்ந்த இரமண பக்தர்கள் பகவானிடம் அவர்களுக்கு கிடைத்த சந்நிதி வாசத்தின் மேன்மையே தன்னுடைய பாடல்களை இயல்பாக, இனிமையாக, எளிமையாக நல்ல தமிழில் எழுத முடிந்தது. இருபது ரூபாய்க்கு, 91 பக்கங்களில் பக்கத்திற்கு பக்கம் கண்ணைக் கவரும் இரமணரது அழகான பாடல்கள், சித்திரங்கள், நல்ல முறையில் அச்சு செய்யப்பட்டு வெளிவந்திருக்கிறது. இரமண பக்தர்கள் வீடுதோறும் பாடிப் பரவசமடைய வேண்டிய சிறப்பு பாமாலை இந்த நூல்.

சு. குருசாமி
தலைவர், இரமணகேந்திரம்,
மதுரை.



டெல்லி ரமண கேந்திரம் (உள்ளே)
Delhi Ramana Kendra Shrine

ஸ்ரீ ரமண கேந்திரம், புது டில்லி
Ramana Kendra, New Delhi